[illegible]

[illegible] 3 [illegible] 1

ജൂൺ. 1932

1930-32

JL

ma2:11, M30BV

M32.3.1.

188790

861 gd. No. M. 2573. 3-1



# பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

சிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15. வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

## சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால் உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நான்கு அணா அதிகமாக செலவாகிறது சிங்கப்பூர் பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

**விளம்பர விகிதம்.**

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20. அரைப் பக்கம் ரூ 11

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

**பாலவித்யா ஆபீஸ்,**

**கீழ அய்யன் தெரு, ஸ்ரீவித்யா பிரஸ், கும்பகோணம்.**

உ 188790
13 FEB 1932

# பால வித்யா.

(மாதப் பத்திரிகை,)

“ உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்”

“ எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

| தொகுதி III | 1932ஆ ஜனவரி௴ பிரஜோத்பத்திஆ தை௴ | பகுதி I |
|---|---|---|

## ஹாஸ்ய விநோதங்கள்.

பொய்க் கையெழுத்திட்டதற்காக தண்டனை அடைந்து ஜெயிலுக்கு வந்த கைதியாகிய வீரனை நோக்கி ஜெயில் வார்டர் சொல்லுகிறார்.

**ஜெயில் வார்டர் :**—எய், முன்னூற்று நாலு ! இது தான் உன் ரூம் இனி உனக்கு வேலை கொடுக்கவேண்டும். என்ன வேலை செய்வாய் ?

**வீரன் 304 :**—ஒருமாதம் பழகுவதற்கு டயம் தந்தால் உங்கள் ஆபீஸ் கடிதங்கள் எல்லாவற்றிலும் உங்களுக்குப் பதிலாக நானே கையெழுத்துப் போட்டுவிடுகிறேன்.

* * * *

சீனுவைப் பார்த்துவிட்டுப் போவதற்காக அவன் மாமா அவன் வீட்டிற்கு வந்திருந்தார். சீனுவின் புத்திசாலித்தனத்தை அறிவதற்காக அவர் சீனுவைப் பார்த்து

“ சீனு ! உனக்கு இருநூறு ரூபாய் கொடுத்தால் நீ என்ன செய்வாய் ? ” என்றார்.

**சீனு :**—உடனே எண்ணிப்பார்ப்பேன்.

* * * *

ஒரு கணவனும் மனைவியும் கோச்சுவண்டியில் ஒரு கிராமத்தின் வழியே பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். மனைவி ஆகாயத்தில் மேகங்கள் அழகாய் அங்குமிங்கும் ஓடுவதைக் கண்டு வியந்துகொண்டிருந்தாள்.

**கணவன் :**—நீ எதைப்பார்த்துச் சந்தோஷப்படுகிறாய் ?

**மனைவி :**—இந்த மேகங்களைப் பார்த்ததில் அவற்றின்மேல் ஏறி சவாரி செய்ய ஆசைப்படுகிறேன்.

**கணவன் :**—அப்படியானால் நீ இந்த வண்டியை ஓட்டு. நான் போகிறேன்.

*   *   *   *

**உபாத்தியாயர்:**—ராமா ! நீயும் சுப்பனுமாக சேர்ந்து ஐந்து ரூபாய் கண்டெடுத்தீர்களானால், ஒவ்வொருவருக்கும் என்ன வரும் ?

**ராமன் :**—(ஆலோசித்து) சண்டை வரும்.

*   *   *   *   *

**உபாத்தியாயர் :**—ராமா! நான் கூறுவதையெல்லாம் சேர்த்து என்ன வாகுமென்பதைச் சொல்.

**ராமன் :**(கற்பலகையைக் கையில் கொண்டு) சரி சார் ! சொல்லுங்கள்.

**உபாத் :**—வீசை ஏழரையணா வீதம் அரை வீசை ஜீனி, படி மூன்றணா வீதம் அரைப்படி கோதுமை, ரூபாய்க்கு இரண்டு சேர் வீதம் நெய் ஒருசேர்,முந்திரிப்பருப்பு ஒருஅணா எல்லாம் என்ன ஆயிற்று.

**ராமன் :**—சார் ! குங்குமப்பூ மறந்துவிட்டீர்களே.

**உபாத் :**—சரி ; ஒரு அணா குங்குமப்பூ.

**ராமன் :**—(யோஜனைசெய்து) ஹல்வாவாகும் ஸார்.

*   *   *   *   *

**கோபாலய்யர்:**—டேய் ராமு ! இது பெருக்கத் தெரியவில்லையா ? கூடம் பத்தடி அகலம்,பதினைந்து அடி நீளம், எவ்வளவாயிற்று.

**ராமு :**—(முனகிக்கொண்டே) பத்தொண்ணுபத்து...

**கோபா :**—ஐயோ ! உன் தங்கைகூட சொல்லிவிடுவாளடா ஏண்டி ஜெயம்! கூடம் பதினைந்தடி நீளம், பத்தடி அகலம் ; பெருக்கினால் என்ன வரும் ?

**ஜெயம் :**—அப்பா ! இரண்டு முறம் குப்பை வரும்.

*   *   *   *

**உபாத் :**—நாராயணா ! எல்லாரும் பிரஸண்டா (Present) ?

**நாராய :**—ஸார் ! வந்திருப்பவர்களெல்லோரும் பிரஸண்ட்தான்.



ஓம் பரப்பிரும்மணே நம:

# அரங்கநாதன் அல்லது கள்ளர்கூட்டத் தலைவன்.

## அத்தியாயம் 1.

"ஆ ! அதன் மர்மம் வெளியாகுமா ? ஆனால் அதைப் பற்றி இப்பொழுது எனக்கு என்ன ஆகவேண்டும் ? இன்னும் அரைமணிநேரத்தில் பத்திரிகைகளுக்குமிகவும் பயங்கரமான சமாசாரம் ஒன்றை அளிக்கப்போகிறேன். அது முழுகி இறந்தான் என்னும் விஷயமே."

இவ்விதம் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு மதராஸ் சென்ட்ரல் ஸ்டேஷன் அருகிலுள்ள கூவம் வாராவதியின்மேல் உலாவிக்கொண்டே ஓர் வாலிபன் பின்வரும் விஷயங்களையும் சொல்லிக்கொண்டான்.

"இனி சிந்தித்து என்னப் பிரயோஜனம் ? உலகில் என்னைப்போலுள்ள வாலிபர்களில் நான் ஒரு பெரிய மூடன். மிகவும் அறிவற்ற மூடன் மனிதர்களில் அநேகர் பெண்கள் வசப்பட்டு அழிகிறார்கள். அதில் நானும் ஒருவனே. அம் மூடர்கள் தங்கள் கைப்பொருளை இழந்து தத்தளிக்கும் சமயம் அவர்களை அக்கதிக்கு ஆளாக்கிய பெண் பேய்கள் அவர்களைப் பரிகசித்து மிக்க கேவலமாய் நடத்துவதுடன் வேறு எவரை இவ்விதம் செய்யலாமென்று மீன்கொத்தியைப்போல் கண்ணும் கருத்துமாய் கவனித்துக்கொண்டே இருப்பார்கள். அம்மம்மா ! இவ்விதமான பெண் பேய்களைக் காண்பதே மகா பாபம். உம். நான் அவளை நம்பியே இக்கதிக்கு உள்ளானேன். அப்படி இருந்த

போதிலும் அவளை இப்பொழுதும் காதலிக்கிறேன். இன்னும் என்ன நேர்ந்தபோதிலும் காதலிப்பேன்.''

அப்பொழுது இரவு சுமார் 11 மணி இருக்கலாம். அன்றிரவு மிக பயங்கரமாய்க் காணப்பட்டது. ஆகாயம் கருமேகங்களால் வியாபிக்கப்பெற்று எங்கும் அந்தகாரமாகவே இருந்தது. மழையும் பிசுபிசு என்று தூறிக்கொண்டிருந்தது. அப்பொழுது, அவ் வாலிபன் அவ் வாராவதியின் மத்தியில் கைப்பிடிச்சுவரில் சாய்ந்துகொண்டு கீழே சுழிகளோடு வேகமாய் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்றை உற்று நோக்கிக்கொண்டிருந்தான். அவ் வாராவதிக்குச் சற்று தூரத்தில் சென்டிரல் ஸ்டேஷனும், அதில் பிரகாசிக்கும் காந்த விளக்குகளின் பிரகாசமும், பார்ப்பவர் கண்களைக் களிக்கச் செய்தன. அதற்குப் பக்கத்திலுள்ள வால்டாக்ஸ் ரோடில் அவன் வசித்துவந்த கோமளவிலாஸ் என்னும் போஜன விடுதியும் அதில் தங்கியிருக்கும் புருஷர்களின் கம்பீரமான குரலோசையும் பெண்களின் இனிமையான சங்கீதத் தொனிகளும் இடையிடையே அவர்கள் சந்தோஷமாய் சிறிக்கும் சத்தமும் அவ் வழியே செல்லும் மனிதர்களின் மனதைக் கவர்ந்துகொண்டிருந்தன. அச்சமயம் அவ் வாராவதிச் சாலையின் வழியாக சில சோம்பேரிகள் தங்கள் காதலிகளோடு குடித்துவிட்டு சந்தோஷமாயும் ஒய்யாரமாகவும் சிங்காரத் தோட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். மற்றப்படி அச் சாலை மனித சஞ்சாரமற்றதாகவே இருந்தது. இதற்கு பத்து நிமிஷங்கள் முன்புதான் இவ் வாலிபன், தான் இரண்டு வருஷங்களாய் வசித்துவந்த கோமளவிலாஸ் என்னும் போஜனசாலையிலிருந்து வெளிப்பட்டு, அவ் வாராவதியின்மேல் உலாவிக்கொண்டிருந்தான். அவனுக்கு வயது சுமார் 22 அல்லது 23 இருக்கலாம். அவன் கொஞ்சம் உயரமுள்ளவனென்றே சொல்லலாம். அவன் சிவந்த மேனியும் மிருதுவான சரீரமும் கம்பீரமான பார்வையுமுள்ளவன். அவனது கருத்து அடர்ந்த தலைமயிர் கத்தரிக்கப்பட்டு வெகு அழகாக சீவப்பெற்றிருந்தது. அவன் இடையில் சலவை செய்த மல்லும்



மேலில் சைனு பட்டுக் குடுதாவும் கொள்ளேகால் பட்டு உருமாலும் தரித்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்க்கில் அவன் ஓர் பிரபுவின் புத்திரனென்றும் சேர்க்கை தோஷத்தால் கெட்டுப்போனவனென்றும் விளங்கும். அவன் தன் நிலைமையை இரண்டுமணி நேரத்திற்குமுன்புதான் தெரிந்துகொண்டான். தன் கதி அதோகதியென்றும் தன்னிடமிருந்த பொருள்களெல்லாம் பறந்துவிட்டனவென்றும் தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள தற்கொலையே தான் வழியென்றும் தெரிந்துகொண்டான். அன்றிரவு சுமார் $8\frac{1}{2}$ மணிக்குத் தன் அறையில் தனது நண்பர்களுடன் வேடிக்கையாய் சம்பாஷித்துக்கொண்டு இராப் போஜனமுண்டுகொண்டிருந்தான். இவர்கள் இவ்விதமாய்த் தங்கள் காலத்தை குதூகலமாய் கழித்துக்கொண்டிருக்கையில், அவ் வோட்டல் வேலையாளாகிய சுப்பன் ஓர் தந்தியைக் கொண்டுவந்து அவ் வாலிபனிடம் கொடுத்தான்.

அவ் வாலிபன் அதைப் பிரித்து வாசித்துப் பார்க்க, அதில் தான் தன் ரொக்கம் முழுவதையும் கட்டியிருந்த ஒரு பெரிய பாங்கி கல்கத்தாவில் முழுகிப்போய்விட்டதாக அவனது நண்பர் ஒருவர் தந்திகொடுத்திருப்பதாய்த் தெரிந்துகொண்டான். இதிலிருந்து தன் நிலைமை மிக்க கேவலமாய்ப் போய்விட்டதென்றும், தனக்குக் கடன் கொடுத்திருப்பவர்கள் இதைத் தெரிந்துக்கொண்டால், அவர்கள் தன்னை கண்டிப்பாய் ஜயிலுக்கு அனுப்பப் பின்வாங்கமாட்டார்களென்றும் கண்டுகொண்டான். ஆனால் மிக்க மனோதைரியமுள்ளவனாகையால் மனதை திடப்படுத்திக்கொண்டு தந்தியைத் தன் சொக்காய்ப்பையில் வைத்துக்கொண்டு சந்தோஷமான முகத்தோடு தன் நண்பர்களுடன் சம்பாஷிக்கலானான். அவர்களும் தந்தியிலுள்ள சமாசாரத்தைப் பற்றிக் கேட்க அது தனக்கு அனுகூலமானதென்று சொல்லிவிட்டான். பிறகு சுமார் 10 மணிக்கு அவர்கள் விடைபெற்றுச் சென்றதும், பாலகிருஷ்ணன் என்னும் அவ் வாலிபன் தன் அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு தந்தியை மறுபடியும் வாசித்துப்பார்க்க தன்னால் அடக்கமுடியாத

துக்கத்துடன் கண்ணீர் வடிய "ஆ கடவுளே! என் பெற்றோர்கள் வைத்துப்போன பூஸ்திதிகளை விற்று ரொக்கமாக்கி அதை அக் கம்பெனியில் கட்டிவைக்கும்படி அத்துரோகி சொன்னானே. எனது நண்பன் திருவேங்கடம் என்னை எவ்வளவோ வேண்டிக்கொண்டும் தடுத்தும், நான் அவன் சொற்களைக் கேட்காமல்போனேனே. பால்ய வயதில் என் பெற்றோர்களை இழந்து இவ்விதம் தவிக்கவோ என் தலைவிதி. சே; அவளை வீணாய் நொந்துகொள்வதில் என்ன பிரயோஜனம்? அவளோ என் காதலி. நாளைக் காலையில் என் கதி என்னவாகும்? என் பெற்றோர் கௌரவத்தையும் என் மானத்தையும் காப்பாற்றிக்கொள்ள என் உயிரை மாய்த்துக்கொள்வதைத் தவிர வேறுவழி கிடையாது." என்று சொல்லிக்கொண்டே தன மேஜையைத் திறந்து தனது இரட்டைக்குழாய் கைத்துப்பாக்கியை எடுத்துத் தோட்டாக்கள் போட்டு சுடுவதற்குத் தயாராய் வைத்துக்கொண்டான்.

"சே; நான் என்னகார்யம் செய்யப் புகுந்தேன்? துப்பாக்கிச் சத்தம் வெளியே கேட்டால் கலவரமாகிவிடும். மேலும் குறி தப்பினாலும் அல்லது உடனே மரணம் நேரிடாமற்போனாலும் இன்னம் கேவலமாகிவிடும்." என்று யோஜித்துக்கொண்டு மறுபடியும் துப்பாக்கியை மேஜைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு சற்றுநேரம் ஆழ்ந்த யோஜனையிலிருந்து "சரி; வேறுவழியோ இல்லை." என்று சொல்லிக்கொண்டு தனது மேல் பட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே வந்தான். இவன் அந் நேரத்தில் வெளியே செல்வதைக் கண்ட காவல்காரன் சொக்கன்,

"எஜமானே! வெகுநாழிகை செல்லுமோ?" எனக் கேட்டான். வாலிபன்,

"சொக்கா! நான் தண்டையார்ப்பேட்டைவரையிலும் போய்வருகிறேன். திரும்பிவர கொஞ்சம் நாழிகை செல்லும். வந்ததும் கதவைத் திறக்கிறாயா?" என்று கேட்டுக்கொண்டே முன் நாம் அவனைக் கண்ட இடம் சென்று யோஜித்துக்கொண்டிருந்தான்.



இப்படி இவன் ஆழ்ந்த யோஜனையிலிருக்கும்போது "ஐயா! தயவுசெய்து மண்ணடிக்குப்போகும் வழியைத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன்." என்று சொல்லும் இனிமையான குழந்தையின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

பார்க்க, பாவாடையும் தாவணியும் அணிந்துகொண்டு மிகவும் அழகுவாய்ந்த எட்டு வயதுள்ள பெண் குழந்தை தன்னை மருண்டு பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான்.

பாலகி:—நீ யாரம்மா? என்னவேண்டும்? இவ்விருட்டில் எங்கே போகிறாய்? (என்று பக்ஷமாய்க் கேட்டான்.)

பெண்:—ஐயா! என் பெயர் கல்யாணி. நான் இருப்பது எழும்பூர். என் தாயார் திடீரென்று நோயுற்றாளாகையால் மண்ணடியிலுள்ள என் பெரிய தாயை அழைத்துவரப் புறப்பட்டேன். எனக்கு வேறே துணை ஒருவரும் கிடையாது. நான் அவ்விடம் அடிக்கடி போய்வருவதுண்டு. நாழிகையும் ஜாஸ்தியாய் விட்டது. மேலும் மழையும் பலக்கும்போல் காண்கிறது. இருட்டில் வழியும் சரியாகத் தெரியவில்லை. பயமாகவும் இருக்கிறது. கொஞ்சம் தயவு செய்ய வேண்டும். உங்களுக்கு புண்ணியமுண்டு. (என்று சொல்லித் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தது.)

இதைக் கண்ட பாலகிருஷ்ணன், மனமிறங்கி அப் பெண்ணைப் பார்த்து, "பயப்படாதே. உன்னை அங்கே கொண்டுபோய் விட்டுவிடுகிறேன்." என்று அக் குழந்தைக்குத் தைரியம் சொல்லி அழைத்துக்கொண்டு வண்டி மேடைக்குச் சென்று ஒரு வாடகை வண்டி அமர்த்திக்கொண்டு, வண்டி செல்லவேண்டிய வீதி, வீட்டின் நம்பர் முதலியவைகளை அப் பெண்ணைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, வண்டிக்காரனை பவழக்காரத்தெரு 31 நெ. வீட்டிற்கு ஓட்டும்படி உத்திரவிட்டு, வண்டியில் குழந்தையைத் தன் பக்கத்தில் வைத்துக்கொண்டான். வண்டியும் போய்க்கொண்டிருக்க லாந்தல் வெளிச்சத்தில் பாலகிருஷ்ணன் அக்

குழந்தையைக் கவனித்தான். குழந்தை மிக்க அழகுள்ளதாகக் காணப்பட்டபோதிலும் பரிதாபமாக அழுதுகொண்டிருந்தது. அதைச் சமாதானப்படுத்திக்கொண்டிருக்கையில், வண்டியும் அது செல்லவேண்டிய இடத்தில் வந்து தட்டென்று நின்றது. உடனே வண்டியைவிட்டு இருவரும் இறங்கினார்கள். குழந்தை வீட்டின் கதவைத் தடதடவென்று தட்டியது. பாலகிருஷ்ணனும், வண்டியின் சத்தத்தைக் கொடுக்கவேண்டித் தன் சட்டைப்பையைப் பார்க்க, தனது திரண்ட சொத்தில் தனக்கு மிகுதியாயிருந்த அணா எட்டையும் கொடுத்துவிட்டு, அவ் வீட்டின் பக்கம் திரும்பினான். கதவு தட்டப்படும் சத்தங் கேட்ட அவ் வீட்டு யஜமானர் கையில் ஓர் விளக்கை எடுத்துக்கொண்டு விரைவாய்ச் சென்று கதவைத் திறந்தார். அவரைக் கண்டதும் கல்யாணி "பெரியப்பா! பெரியம்மா இருக்கிறார்களா? அம்மாவுக்கு திடீரென்று உடம்பு ஜாஸ்தியாய்விட்டது. நான் என்ன பண்ணுவேன்? இதோ நிற்கும் புண்ணியவான் என்னை இங்கு அழைத்துவந்தார். இவர் இல்லாவிட்டால் நான் என்ன பண்ணுவேனோ தெரியாது." என்று சொல்லி அழ ஆரம்பித்தது. இதைக் கேட்ட அவ் வீட்டுக்காரர் "அம்மா கல்யாணி! அழாதே. உன் பெரிய தாயார் உள்ளே படுத்துக்கொண்டிருக்கிறாள். போ." என்று சொல்லி பாலகிருஷ்ணனைப் பார்த்து "ஐயா! நீர் என் குழந்தைக்குச் செய்த உபகாரம் மறக்கக்கூடியதன்று. மிகவும் வந்தனம். தெருவில் ஏன் நிற்கவேண்டும்? உள்ளே வரலாம். இதை உங்கள் வீட்டைப்போல் பாவிக்கவேண்டும். நடந்த விருந்தாந்தத்தைக் கேட்க மிகவும் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். தயவு செய்யவேண்டும்." என வேண்டிக்கொண்டார்.

பாலகிருஷ்ணனும் அவ்வாறே வீட்டிற்குள் நுழைய, வீட்டுச் சொந்தக்காரராகிய அரங்கநாதர், கதவைச் சாத்தி உள்பக்கம் தாளிட்டுவிட்டு "ஐயா! நாம் மெத்தைக்குச் செல்வோம். நீர் வந்ததும் நல்ல சமயந்தான். இப்பொழுது என்னுடன் என் நண்பர்கள் மூவர் வந்திருக்கிறார்கள். வா



ரும்." என்று சொல்லி மெத்தை மீது ஏறி அங்குள்ள கூடத்தைத் தாண்டி பக்கத்திலுள்ள ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார்.

அவ் வீடு இரண்டடுக்குள்ள ஓர் மெத்தை வீடு. பார்ப்பதற்கு அழகாகவும் வசிப்பதற்கு மிகவும் சௌகரியமுள்ளதாகவும் காணப்பட்டது. வீடு முழுவதும் மின்சார விளக்குகளும் விசிறிகளும் நிறைந்திருந்தன. மெத்தைக் கூடத்தின் சுவர்களில் மேல்நாட்டுப் படங்களும், உள் நாட்டுப் படங்களும், பெரிய நிலைக்கண்ணாடிகளும் மாட்டப்பட்டிருந்தன. தரையின்மேல் மூன்று அங்குலம் கனமுள்ள துருக்கிதேசத்து ரத்தின கம்பளம் பரப்பப்பட்டிருந்தது. நாற்காலிகளும், மேஜைகளும், பீரோக்களும் அங்கு ஒழுங்காய் வைக்கப்பட்டிருந்தன. இவைகளைப் பார்க்கும்போது அவ் வீட்டில் வசிப்பவர் ஓர் பெரியமனிதரென்றே சொல்லவேண்டும். அவர் பெயர் அரங்கநாதர். அவருக்கு வயது சுமார் ஐம்பத்தைந்து அல்லது அறுபது இருக்கலாம். ஆறு அடி உயரமும் அதற்கேற்ற தேக அமைப்பும் உள்ளவர். அவர் வளர்த்திருந்த தாடி, மீசைகள் ஒரே வெண்மையாயிருந்தன. அத் தாடியும் அவர் மார்பில் புறண்டுகொண்டிருந்தது. நெற்றியில் பட்டையாக நாமம் தரித்துக்கொண்டிருந்தார். அவர் தோற்றம் அவரைப் பார்க்கும்போதே ஒருவித அச்சமும் மரியாதையும் உண்டாகக்கூடியதாக இருந்தது. அவர் சிநேகிதர்களில் ஒருவர் பெயர் தியாகராஜர். அவர் கொஞ்சம் குட்டையாயும் இரட்டைநாடியாயுமிருப்பார். தலை வழுக்கை. எப்பொழுதும் மூக்குக்கண்ணாடி அணிந்துகொண்டிருப்பார். நல்ல சிவந்த மேனி. அவர் புராதன நூல்களில் மிக்க பாண்டித்தியமுள்ளவர். அவருக்கு சுமார் எட்டு பாஷைகள் எழுதவும் பேசவும் தெரியும். மிகவும் படிப்பாளி. ஆனால் எவருக்கும் ஒன்றும் தெரியாதென்று அவருக்கு எண்ணம். இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களின் தலைநகரங்களிலுள்ள அநேக சங்கங்களில் மெம்பர். எடுத்த காரியத்தை முடிப்பதில் திருஷ்டியுள்ளவர். சற்று முன்

கோபி. வயது சுமார் நாற்பது அல்லது ஐம்பது இருக்கும். மற்றொருவர் பெயர் வீரபத்திரர். ரூபத்திலும் வீரபத்திரரே. ஆறு அடி உயரமும், விசாலமான மார்பும், உருண்டு திரண்ட புஜங்களும், கார்மேகம்போல் கருத்த சரீரமுமுள்ளவர். கண்கள் எப்பொழுதும் கோவைப்பழம்போல் சிவந்து விளங்கும். கொஞ்சம் லாகிரி வஸ்துக்களில் பிரியமுடையவர். மற்றொருவன் பெயர் சோமனாதன். சுமார் இருபது வயதிருக்கலாம். நல்ல ரூபவான். ஆனால் சுயநலமே பாராட்டும் குணமுடையவன். காரியம் ஆகவேண்டுமானால் கொலைக்கும் அஞ்சாத நெஞ்சமுள்ளவன்.

அரங்கநாதனும் பாலகிருஷ்ணனும் அறைக்குள் வந்ததும், அம் மூவர்களும் தங்கள் ஆசனங்களினின்று எழுந்து உபசரித்தார்கள். அரங்கநாதன் பாலகிருஷ்ணனை அவர்களுக்கு அறிமுகமாக்கி அவர்களையும் பாலகிருஷ்ணனுக்கு அறிமுகம்செய்துவைத்தான். பிறகு அவ்வைவர்களும் ஆசனங்களில் அமர்ந்தார்கள். அரங்கநாதன் மேஜைமேலிருந்த மணியை அடிக்க உடனே வேலைக்காரன் மருதன் அவ்வறைக்குள் வந்தான். அரங்கநாதன் தங்கள் ஐவர்களுக்கும் காபி கொண்டுவரும்படி உத்திரவுசெய்ய, மருதனும் கீழே சென்று சற்றுநேரத்தில் ஐந்து வெள்ளி டம்ளர்களில் சூடான காபியை ஓர் தட்டில்வைத்துக் கொண்டுவந்து மேஜையின்மேல் வைத்து விலகி நின்றான். அரங்கநாதள் தன் தோழர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் டம்ளர் கொடுத்துத் தானும் ஓர் டம்ளர் எடுத்துக்கொண்டான். எல்லோரும் காபி அருந்தினபிறகு, மருதன் டம்ளர்களையும் தட்டையும் எடுத்துக்கொண்டு கீழே சென்றான். அரங்கநாதன் பாலகிருஷ்ணனிடமிருந்து குழந்தையின் சாமாசாரத்தைக் கேட்டுப் பிறகு சற்றுநேரம் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தான். கூடத்தில் மாட்டியிருந்த கடிகாரமும் மணி ஒன்று அடித்தது. உடனே அரங்கநாதன் தன் ஆஸனத்திலிருந்து எழுந்து பாலகிருஷ்ணனைப் பார்த்து "ஐயா பாலகிருஷ்ணரே! உம்மைச் சிநேகித முறையில் ஒரு அந்தரங்கமான கேள்விகேட்கலாமோ?" என்று கேட்டான்.



பாலகி:—கேளுங்கள். அதனால் என்ன பாதகம்?

அரங்க:—தாங்கள் ஓர் பணக்காரர்தானே? கோபித்துக் கொள்ளக்கூடாது. ஏதோ வேடிக்கைக்காகக் கேட்டேன். பதில் சொல்லக்கூடுமானால் சொல்லும். இல்லாவிட்டால் வேண்டாம்.

பாலகி:—இதுதானா? நான் இப்பொழுது பணக்காரன் அல்ல. ஏன் எதற்காகக் கேட்டீர்கள்?

அரங்க:—ஆனால் உமக்குப் பணக்காரராக இஷ்டமுண்டோ?

இதற்கு பாலகிருஷ்ணன் மௌனமாயிருப்பதைக் கண்ட மற்ற நால்வரும் இவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பாலகிருஷ்ணனும் இந்தக் கேள்வியில் ஏதோ விசேஷமிருப்பதாக இப்பொழுதுதான் தெரிந்துகொண்டான். ஆனால் அது என்னவென்பதைமட்டும் ஊகித்தறியமுடியவில்லை.

## அத்தியாயம் 2.

அரங்க:—ஐயா பாலகிருஷ்ணா! பணத் தேவையுள்ளவர்கள் அதை விரும்புவது உலகத்தில் சகஜமே. நீங்களும் அதில் ஒருவர்தாமோ?

பாலகி:—ஆம்; "பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும்" என்னும் பழமொழியைக் கேட்டதில்லையோ?

அரங்க:—சரி; இனி நாம் தாராளமாய்ப் பேசலாம். நான் சொல்லுவது உங்களுக்கு மனத்தாங்கலாயிராதென்று நினைக்கிறேன். இப்பொழுது உங்களுக்குக் கொஞ்சம் பணத்தட்டென்று எனக்குத் தெரியும். அது உண்மைதானே? சில ஆயிர ரூபாய்கள் இருந்தால் மிகவும் ஒத்தாசையாயிருக்குமல்லவா?

பாலகி:—ஆம்; அவைகள் மிகவும் உபயோகமுள்ளதாய் இருக்கும்.

அரக்க:—நீங்கள் உண்மையை ஒளிக்காமலும் கபடமில்லாமலும் பேசுவதைப்பற்றி மிகவும் சந்தோஷம். ஒருவரும் தன் தரித்திர ஸ்திதியைப்பற்றி பிறரிடம்

சொல்லமாட்டார்கள். அது நிச்சயமாய் எனக்குத் தெரியும்.

இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் தான் தவறுதலாய் ஒப்புக்கொண்டதைப்பற்றி மனதில் வருந்தினான். இவ்விதம் கேட்டதின் அபிப்பிராயம் என்னவென்பதைப்பற்றி தெரிந்துகொள்ளமுடியவில்லை. இருந்தபோதிலும் மனதை ஒருவிதமாய்த் தேற்றிக்கொண்டு "நீங்கள் கேட்ட கேழ்விகளுக்கு உள்ளபடி பதில் சொன்னேன். பணக்காரனைப் போல் நடிப்பதற்குச் சக்தி வேண்டாமா?" என்றான்.

அரங்க:—வீண் டம்பமும் தற்புகழ்ச்சியுமே மேலாடும். இவ்வுலகத்தில் அவைகளிலிருந்து தப்பியவர் நீர் ஒருவரென்றே எனது அபிப்பிராயம். என்ன நான் சொல்லுவது சரிதானே? (என்று தன் நண்பர் மூவரையும் நோக்கி வினவினான்.)

தியாக:—ஆம்; நீர் சொல்லுவது வாஸ்தவமே. இக்காலத்தில் பொய்யும் பேராசையும்தான் தலையெடுத்திருக்கின்றன. பொழுதுவிடிந்ததும் ஜனங்கள் பணம் சம்பாதிக்கும்பொருட்டு எவ்வித முயற்சியும் செய்கிறார்கள். பாபம் புண்ணியம் என்பனவற்றை நினைப்பதே கிடையாது. அவர்கள் செய்வது தகாத காரியமாக இருந்தபோதிலும் பணம் கிடைத்துவிட்டாற் போதும். நீங்கள் ஏதாவது உத்தியோகத்தில் இருக்கிறீர்களோ? (என்று பாலகிருஷ்ணனைப் பார்த்துக் கேட்டான்.)

பாலகி:—இப்பொழுது பட்டணத்தில்தான் வாசம். ஏன்! தாங்கள் கூறிய மனிதர்களில் நானும் ஒருவனென்றே காண்கின்றதே. (என்று பரிகாசமாய் சிறித்துக்கொண்டே தியாகராஜனைப்பார்த்துச் சொன்னான்.)

தியாக:—நான் சொல்லுவது பிசகன்று. யோக்கியமாய்ப் பணம் சம்பாதிக்க இது காலமன்று. அப்படியே சம்பாதித்தாலும் தன் காலக்ஷேபத்திற்கே இழுப்பாயிருக்கும். நான் முன் சொன்ன மாதிரியாய் சம்பாதிப்பவர் சீக்கிரத்திலேயே பெரும் பொருள் சம்பாதித்து மிகவும் குதூகலமாய் வாழ்கிறார்கள். ஒருவருக்குப் பணம் இருந்தால் அவன் இவ்வுலகில் அடையக்கூடிய சுகங்களை அடைவதோடும் தம் பகைவர்களையும் ஒரு கொசுவைக் கொல்லுவதுபோல் தொலைத்துவிடுகிறார்கள். ஆகையால் உமக்குப் பணம் ஏராளமாய் இருக்கும்பக்ஷத்தில் உம்மைக் கண்டு மரியாதை செய்கிறவர்களும் அடங்கி ஒடுங்கிப் பயந்து நடப்பவர்களும் ஏராளமாய் இருப்பார்களென்பதற்குச் சந்தேகமேயில்லை. நான் சொல்லுவது சரிதானே? (என்று தன் நண்பர்களைப்பார்த்துச் சிறிப்போடு கேட்டான்.)



சோமநாதன்:—ஆம்; பணமில்லாதவன் நடைப்பிணம்தான். அதிலும் இப் பட்டணத்தில் பணமில்லாவிட்டால் இறந்தவன் மாதிரியே. அதற்கென்ன தடை?

அரங்கநாதன் இவைகளைக் கேட்டு பாலகிருஷ்ணனைப் பார்த்து "இவர்கள் சொல்லுவது வாஸ்தவமே. அவ்விதம் தான் நடந்துவருகிறது. நான் முன்சொன்னபடி உமக்கு சில ஆயிரம் ரூபாய்கள் இப்பொழுது இருந்தால் சௌகரியம்தானே?" என்று கேட்டான்.

பாலகி:—ஆம்; அவை மிக்க உபயோகமுள்ளவைதான். ஆனால் அத்தொகை நியாயமானவழியில் கிடைத்தால்.

அரங்க:—உமக்கு அத்தொகை அவசியமாயிருந்தால் நானும் இதோ இருக்கும் என் நண்பர்களும் நியாயமாகவும் சுலபமாகவும் அதைச் சம்பாதித்துக்கொள்ள ஒரு வழியைச் சொல்லுவோம்.

இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் ஆச்சர்யத்தினால் பிரமித்துப்போய் பின்வருமாறு தனக்குள் எண்ணிக்கொண்டான். "என்ன நான் காண்பது கனவா? ஒரு மணி நேர காலத்துக்குமுன் தற்கொலை செய்துகொள்வதாய்த் தீர்மானித்தேன். இப்பொழுது இவர்கள் சொல்லுவது மிகவும் விந்தையாயிருக்கிறதே. தெய்வமும் என் பக்கில் இருப்பதாகத் தோன்றுகிறது." பிறகு அரங்கநாதனைப் பார்த்து "நல்லது. சொல்லுங்கள்." என்றான்.

அரங்கநாதன் "தோழர்களே! அதை இந் நண்பனிடம் சொல்லலாமா?" என்று தனது நண்பர்களைப் பார்த்துக் கேட்டான். அவர்களும் அவ்வாறே சொல்லும்படி அனுமதி கொடுத்தார்கள்.

அரங்க:—மிகவும் சந்தோஷம். பாலகிருஷ்ணா! அதை உன்னிடம் சொல்லுவதற்கு முன்னால் நான் சொல்லப் போவதை மிகவும் ரகசியமாகவும் எக்காரணத்தாலும் பிறருக்குச் சொல்லுவதில்லையென்றும் பிரமாணம் செய்யவேண்டும்.

பாலகி:—சரி; அவ்விதமே இதோ செய்துவிட்டேன். இனி சொல்லலாம்.

அரங்க:—நல்லது. நான் சொல்லப்போவதின் தாத்பரியம் என்னவென்றால் நம்முடைய லாபகரத்திற்காக எங்களோடு ஒத்துழைக்கக்கூடிய நம்பிக்கையுள்ள யோக்கியமான ஒருவர் வேண்டும். அப்படிப் புதிதாக வருகிறவர்களில் நீயே மேலானவனென்று உன்னுடன் பேசியதிலிருந்து தெரிந்துகொண்டேன். நீயும் எங்களிடம் பூர்ண நம்பிக்கை வைக்கவேண்டும். அதற்காக நீர் ஏராளமாய்ச் சன்மானிக்கப்படுவீர்.

பாலகி:—நான் செய்யவேண்டியதென்ன?

அரங்க:—அது மிகச் சுலபமானது. ஆனால் நீ ஒரு கொள்ளைக் கூட்டத்திலாவது வேறு எவ்விதமான அபாயகரமான சங்கங்களிலாவது சேர்ந்துகொள்வதாய் எண்ணிவிடக்கூடாது. நான் சொல்லப்போவது மிகவும் யோக்கியமான தொழிலே. நாங்கள் ரசாயன சாஸ்திர முறையில் ஓர் ஔஷதம் கண்டுபிடித்திருக்கிறோம். எங்கள் விரோதிகள் அம் முறையை எப்படியோ எங்களிடமிருந்து அரைகுறையாய்த் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதை பகிரங்கப்படுத்த முந்திக்கொள்ளாவண்ணம் தடுக்க உன் ஒத்தாசை வேண்டும். நீயும் அப்படியே செய்யவேண்டும்.



பாலகி:—எவ்விதத்தில் எம்மாதிரியாக ஒத்தாசை செய்ய வேண்டும்.

அரங்க:—இப்பொழுது எங்கள் முறையை நாங்கள் வெளியிடலாகாது. ஆனால் அது உலகிலுள்ள மானிடர்களுக்கு மிக்க நன்மை செய்யக்கூடியது. நீ செய்யவேண்டியதைமட்டும் இப்பொழுது சொல்லுகிறேன். அதோடுகூட உனக்கு நாங்கள் செய்யும் பிரத்யுபகாரத்தையும் பற்றி சொல்லுகிறேன். கவனமாய் கேட்கவேண்டும்.

பாலகி:—சரி; சொல்லுங்கள்.

அரங்க:—சுருக்கமாக இவைகள் தாம்: நாங்கள் கண்டுபிடித்திருக்கும் முறை மிகவும் சிலாக்கியமானது. எங்கள் விரோதிகளுக்கு அதன் இரகசியம் அரைகுறையாகத்தான் தெரியும். அந்த இரகசியம் எங்கள் தலைவர் பத்மநாபர் என்னும் மகானுக்குத்தான் தெரியுமென்றும், எங்கள் விரோதிகள் வெளிப்படுத்தும் முறையை அவர் அழுத்தமாய்க் கண்டித்து அது உபயோகமற்றதென்று நிரூபிக்கத் தயாராய் இருக்கிறார் என்றும், ஒரு கட்டுக்கதையைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். உண்மையில் பத்மநாபர் என்பவர் இலர். அது எங்கள் கற்பனை. ஆகையால் நாங்கள் ஜயமடையும் வரையில் நீ பத்மநாபர் என்னும் பெயருடன் வசிக்கவேண்டும். இதற்கு உன் அபிப்பிராயமென்ன? மனதில் உள்ளதை தாராளமாய்க் கூறலாம்.

அரங்கநாதன் இப்படிச் சொன்னதும் மற்ற மூவரும் பாலகிருஷ்ணன் முகத்தையே பார்த்துக்கொண்டு அவன் கூறப்போகும் பதிலை அதிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பாலகி:—நீங்கள் சொல்லவேண்டியதைச் சொல்லியாய்விட்டதா? நான் செய்யவேண்டியது இன்னும் வேறு ஏதாவதுண்டோ?

அரங்க:—வேறு ஒன்றுமில்லை. நீ ராயபுரத்திலுள்ள சுந்தாவிலாஸ் என்னும் ஹோட்டலில் பத்மநாபர் என்னும்

பெயருடன் வசிக்கவேண்டும். அவ்விடம் நீ வசிப்பதற்கு ஓர் வசதியான அறையும் முன்னமே ஏற்பாடு செய்துவைக்கப்பட்டிருக்கிறது. அங்கு உன் வரவு எதிர்பார்க்கப்படுகிறது. நீ மிகவும் படித்தவர் போலவும் பெரிய ரஸாயன சாஸ்திரி போலவும் நடிக்கவேண்டும்.

பாலகி :—அப்படியானால் உங்கள் விரோதிகள் ?

அரங்க :—அவர்கள் தங்கள் முன் வர அஞ்சிப் பயந்துகொண்டிருக்கிறார்கள்.

பாலகி :—ஆனால் அவர்கள் என் ரகசியத்தைக் கண்டுபிடிக்க முயலுவார்களே.

அரங்க :—ஆம்; உண்மைதான். ஆனால் அந்த ரகசியம் உன்னிடம் இல்லாமலிருக்கும்போது அவர்கள் முயல்வதால் உனக்கென்ன பயம்? அவர்கள் உன் விஷயமாய்ச் செய்யும் சூழ்ச்சிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவேண்டும். எப்படியாவது எங்கள் காரியம் சித்தியடையும் வரையில் காலம் தள்ளிக்கொண்டே போனால் நாங்கள் ஜயமடைவது நிச்சயம்.

பாலகி :—ஆனால் அதற்காக ?

அரங்க :—அதற்காக நீ அடையவேண்டிய பண விஷயம் தானே. நீ செய்யவேண்டியவைகளைப்பற்றிக் கேட்டாயல்லவா? நீ மாறு பெயருடன் வசிப்பதற்காகவும் சொந்த அலுவலை இழந்ததற்காகவும் இன்றுமுதல் உனக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரம் வீதம் இரண்டு வருஷங்களுக்கு இருபத்து நாலாயிரம் ரூபாய் கொடுப்பதாய்த் தீர்மானித்திருக்கிறோம். அதோடு கூட இரண்டு வருஷங்களுக்குள் எங்கள் காரியம் ஜயமடைந்துவிட்டால் நீ பெற்றுக்கொண்டதுபோக அந்த இருபத்தி நாலாயிர ரூபாயில் பாக்கியையும், எங்கள் லாபத்தில் எட்டில் ஒரு பங்கும், கொடுப்பதாய்த் தீர்மானித்திருக்கிறோம். இந்த நிபந்தனைகளுக்கு நீ உடன்படுவாயா ?



இவ்வித ஏற்பாட்டை உதறிவிட்டால் தன் கதி அதோகதி என்றும், இறப்பது நிச்சயமென்றும், இதை ஒப்புக்கொள்வதா வேண்டாமா என்றும், தனக்குள் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான் பாலகிருஷ்ணன்.

அவன் தயங்குவதைக் கண்ட அரங்கநாதன் "பாலகிருஷ்ணா ! நாங்கள் எங்கள் வாக்கைக் காப்பாற்றுவோமா என்பதைப்பற்றி யோஜிப்பதுபோல் காண்கின்றது. நீ எங்கள் ஒப்பந்தத்திற்கு 'சரி' என்று சொல்லும்பக்ஷத்தில் உனக்கு இந்த மாதம் சேரவேண்டிய ரூபாய் ஆயிரத்தையும் இப்போதே கொடுத்துவிடுகிறோம். நீ 'சரி' என்று சொல்லவேண்டியதுதான் தாமதம்." என்றான்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட பாலகிருஷ்ணன் 'சரி' என்று சொல்வதுதான் மேலானதென்று கண்டுகொண்டு "ச—ரி. ஒப்புக்கொள்கிறேன்." என்று தன் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் இழுத்தாற்போல் சொன்னான்.

அரங்க :—நீ செய்ததுதான் சரியான காரியம். அதனால் உனக்கும் எங்களுக்கும் லாபமுண்டு. ஆகையால் நாளைக் காலை பனிரண்டு மணிக்கு உன் பெயரை மாற்றிக்கொண்டு உனக்காக ஏற்படுத்தியிருக்கும் ஓட்டலுக்கு இப்பொழுதுதான் வெளிநாட்டிலிருந்து வந்ததாகக் காணும்படி போய்ச் சேரவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்துகொள்ளவேண்டும்.

பாலகி :—இதைச் சுலபமாய் செய்துகொள்ளலாம்.

அரங்கநாதன் "அப்படியானால் நமக்குள் ஓர் ஒப்பந்தம் எழுதி முடித்துக்கொள்வதும், உமக்கு முதல் மாதம் சேரவேண்டிய தொகையைக் கொடுக்கவேண்டியதும் தான் பாக்கி." என்று சொல்லி மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த காகிதத்தில் உடன்படிக்கை வாசகப்படி எழுதி முடித்துத் தன் நண்பர்களிடம் கொடுத்தான். அவர்களும் அதை வாசித்துப்பார்த்து சில திருத்தங்கள் செய்து பத்திரமெழுதி அதில் அந் நால்வரும் கையொப்பமிட்டார்கள். பிறகு அரங்கநாதனும் சோமநாதனும் அவ்வறையைவிட்டு

வெளிச்சென்றார்கள். சற்றுநேரம் கழித்துச் சோமநாதன் ரூபாய்கள் நிறைந்த பைகள் இரண்டை கொஞ்சம் பிரயாசையோடு கொண்டுவந்து மேஜையின் ஸமீபத்தில் வைத்தான். அந்தப் பாரத்தினால் மேத்தையும் கொஞ்சம் அதிர்ந்தது. அரங்கநாதன் ஒரு பையை அவிழ்த்து மேஜையின் பேரில் ரூபாய்களைக் கலகலவென்று கொட்டிப் பாலகிருஷ்ணனை எண்ணிப்பார்த்துக்கொள்ளும்படி சொன்னான். பாலகிருஷ்ணன் அப்படியே எண்ணிப்பார்த்து தொகை ஸரியாக இருப்பதாகவும், மற்றப் பையை எண்ணவேண்டிய அவசியமில்லையென்றும், தனக்கு இச்சமயம் ரூபாய் ஐந்நூறே போதுமானதென்றும், பாக்கி ரூ. 500யும் காலையில் தன் பெயரால் பாங்கியில் கட்டிவிடவேண்டுமென்றும் சொல்ல, அரங்கநாதன் அவ்விதமே செய்வதாக ஒப்புக்கொண்டான்.

பிறகு பாலகிருஷ்ணன் சுந்தரவிலாசம் போய்ச் சேர வேண்டிய விதத்தைப் பற்றியும் இன்னும் அவன் நடந்து கொள்ளவேண்டிய சில முக்கியமான முறைகளையும் அரங்கநாதன் பாலகிருஷ்ணனிடம் சொல்லி "பாலகிருஷ்ணா! நீ எங்களுடன் எவ்விதமான கடிதப்போக்குவரத்துக்களும் வைத்துக்கொள்ளக் கூடாது. எங்களுக்கு ஏதாவது தகவல் வேண்டுமானால் நானே நேரில் வந்து உன்னைக் காண்பேன். நீ இங்கே வருவதாவது எங்களுடன் பேசவாவது கூடாது. எங்களில் யாரையாவது சந்திக்கும்படி நேரிட்டால் முன்பின் அறியாதவர்கள்போல் நடந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் உமக்குச் சேரவேண்டிய தொகை பாங்கியில் உமது பெயரால் கட்டப்படும். நாங்கள் உன்னை முற்றிலும் நம்பியே இப்படிச் செய்கிறோம். நமது ரகசியம் வெளிவராமல் நடந்துகொள்ளவேண்டியது உனது கடமை." என்று சொன்னான்.

பிறகு சில நிமிஷங்களில் சோமநாதனால் கொண்டுவரப்பட்ட ஒரு வாடகை வண்டியில் தன் பணமுட்டையோடு கோமள விலாஸத்தை நோக்கி வேகமாய்ப் புறப்பட்டான் பாலகிருஷ்ணன்.

---



## அத்தியாயம் 3.

பாலகிருஷ்ணன், வண்டி புறப்பட்டதும் "நான் ஏன் கோமள விலாஸம் போகவேண்டும்? நான் வெளியே வந்ததைக் காவற்காரன் பார்த்து என்னிடம் பேசியுமிருக்கிறான். நான் திரும்பி வாராததைக் கண்டால் எனக்கென்ன சம்பவித்ததோ வென்று எல்லோரும் கவலைப்படுவார்கள். இப் பட்டணத்தில் வெளியே சென்றவர்கள் யாதொரு அபாயமன்னியில் வீடு வந்துசேர்வது மிகவும் அருமை. ஆகையால் வேறு எங்காவது சென்று இவ்விரவைக் கழித்துவிட்டுக் காலையில் சுந்தர விலாஸம் போய்ச் சேர்வதே மேலானது." என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, வண்டிக்காரனுக்குச் சில உத்திரவுகள் செய்தான். வண்டியும் தங்கசாலைத்தெரு வடகோடிக்குச் சென்று ஒருவரும் ஜாஸ்தியாய் தங்கியிராத ஓர் ஹோடல் வாசலில் வந்து நின்றது. பாலகிருஷ்ணன் வண்டிக்காரனுக்கு சத்தம் கொடுக்க, அவன் முன்னமேயே தன்னை அமர்த்தியவரிடமிருந்து பெற்றுக் கொண்டுவிட்டதாய்ச் சொல்லி உடனே சென்றுவிட்டான். உடனே பாலகிருஷ்ணன் ஹோடல் கதவைத் தட்ட, ஹோடல் சொந்தக்காரர், கதவைத் திறந்து வந்தவரின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, அவரை ஓர் அறையில் கொண்டுபோய்விட்டு அதில் தங்கியிருக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொண்டான்.

மறுநாட் காலை பத்துமணிக்கு பாலகிருஷ்ணன், காலையாகாரமுண்டு, ஓர் மோட்டார் வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு, பழைய சாமான்கள் விற்கும் கடைக்கு சென்று, தனக்குத் தேவையான சாமான்களை வாங்கி கூலிக்காரர்கள்வசம் அவைகளை ஒப்பிவித்து அவைகளை ராயபுரத்திலுள்ள சுந்தர விலாஸத்திற்குக் கொண்டு சேர்க்கும்படி ஏற்பாடு செய்துவிட்டு, ஒருமணி வரையில் காலத்தைக் கழித்துவிட்டு, சுமார் ஒன்றரை மணிக்கு சுந்தர விலாஸம் வந்துசேர்ந்தான். இவன் வரவை வாசற்காப்போனால் தெரிந்துகொண்ட ஹோடல் சொந்தக்காரன், வெளியே வந்து

அவன் பத்மநாபன் என்பவரென்று தெரிந்துகொண்டு, வெகு மரியாதையாக அவனை அழைத்துக்கொண்டுபோய், மேல் மெத்தையில் மிகவும் அழகாகவும் வசதிக்கு யோக்கியமாகவும் அலங்கரிக்கப்பட்ட ஓர் அறையைக் காட்டி, "பிரபோ! இவ்வறையும் கூடமும் தங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டவை. தங்களுக்கு வேண்டிய யாவையும் தயாராய் வைக்கப்பட்டிருக்கின்றன. இதன் பக்கத்திலுள்ள அறை ஸ்நானத்திற்கு யோக்கியமானது. இங்கே டெலிபோன் முதலிய வசதிகள் இருக்கின்றன. இதைத் தங்கள் சொந்த மாளிகைபோல் உபயோகித்துக் கொள்ளலாம். தாங்கள் மிகவும் களைப்படைந்திருப்பதாகத் தோன்றுகிறது. கொஞ்சம் சிற்றுண்டி கொண்டுவருகிறேன். சற்று இளைப்பாறுங்கள்." என்று சொல்லிக் கீழே சென்று, ஒரு தட்டில் கொஞ்சம் பிஸ்கோத்தும் ஒரு கோப்பையில் காபியும் கொண்டுவந்து மேஜைமீது வைத்தான். இதற்குள பாலகிருஷ்ணன், தன் உடைகளை மாற்றிக்கொண்டு, அங்குள்ள குழாயில் கை, கால், முகம் முதலியவைகளை சுத்தம் செய்துகொண்டு, மேஜையண்டை ஓர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். பிறகு ஹோட்டல்காரனால் கொண்டுவந்து வைக்கப்பட்டவைகளை சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தான் வாங்கிய சாமான்கள் வந்து சேர, அவைகளைக் கூலிக்காரர்கள் உதவியால் ஹோட்டல்காரன் ஒழுங்காய் அவ்வறையிலும் கூடத்திலும் வைத்துவிட்டு பத்மநாபரின் மறு உத்திரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். அவனது எண்ணத்தை உணர்ந்த பாலகிருஷ்ணன் "நான் இப்பொழுதுதான் சிங்கப்பூரிலிருந்து வந்த கப்பலில் வந்துசேர்ந்தேன். என் ஸாமான்களும் வேலைக்காரனும் அவ்விடத்திலேயே இருக்கிறார்கள். நானும் சில மாதங்களில் திரும்பிப்போகவேண்டியதாய் இருப்பதால் அவைகளை அங்கேயே வைத்துவிட்டு என் வேலைக்காரனைப் பார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆகையால் எனக்கு இப்பொழுது ஓர் வேலையாள் தேவை. உனக்குத் தெரிந்தவரையில் மிகவும் நம்பிக்கையுள்ளவனும் வேலை நன்றாய்த் தெரிந்தவனுமாகிய



ஒருவன் இருந்தால் சொல்லும். அவனை அமற்றிக்கொள்ளுகிறேன்." என்று சொன்னான்.

ஹோட்டல்காரன்:—ஐயா! இன்று காலையில் சீனுக்குட்டி என்னும் ஓர் வாலிபன் இங்கே வந்தான். அவனை எனக்கு நன்றாய்த் தெரியும். தேவசுந்திரப்பிரபு இவ்விடம் இரண்டுவருஷம் தங்கியிருந்தார். அப்பொழுது அவரிடம் இவன் வேலை பார்த்துவந்தான். மிகவும் யோக்கியன், புத்திசாலி, சுறுசுறுப்புள்ளவன். அவன் மலைநாட்டைச் சேர்ந்தவன். அவன் யஜமானர் வெளிநாட்டிற்குப் பிரயாணம் புறப்பட்டபடியால், தனக்கு இப்பொழுது வேலையில்லையென்றும், ஏதாவது வேலை அகப்பட்டால் தன்னை மறந்துபோகக் கூடாதென்றும், என்னை வேண்டிக்கொண்டான். அவனும் இன்று சாயங்காலம் ஆறுமணிக்கு வருவான். அவனை ஏற்பாடு செய்கிறேன்.

பாலகி:—மிகவும் சந்தோஷம். எனக்கு மிகவும் அலுப்பாயிருப்பதினால் யார் வந்து கேட்டபோதிலும் நான் இல்லை என்று சொல்லவேண்டியது உமது ஞாபகத்திலிருக்கட்டும். போய் வரலாம்.

பாலகிருஷ்ணன் வார்த்தையைக் கேட்ட ஹோட்டல்காரன் வெளியே செல்ல, அவன் ஹோட்டலுக்கு வரும் வழியில் வாங்கிய இந்துப் பத்திரிகையை எடுத்துக்கொண்டு ஓர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். சற்றுநேரம் கழித்து பத்திரிகையை மேஜையின்மேல் வைத்துவிட்டுப் பின்வருமாறு யோஜிக்கலானான்.

"என் நிலைமை இன்று காலையிலேயே எங்கும் பரவியிருக்கும். மேலும் நான் காணமற்போனதைப்பற்றி ஜனங்கள் என்ன எண்ணுவார்கள்? எல்லாம் இன்றைய சாயங்காலப் பத்திரிகைகளில் வெளியாகிவிடும். கோமளவிலாஸத்தில் என்னைப்பற்றி ஜனங்கள் விசாரித்துக்கொண்டிருப்பார்கள். நேற்றையதினம் இரவு வெளிச்சென்ற நான் திரும்பி அவ்விடம் வரவில்லை என்று தெரிந்துகொண்

டவுடன், நான் கடன்காரர்களுக்குப் பயந்து எங்கோ மறைந்துவிட்டேனென்று ஊகித்து, அவர்கள் என்னைத்தேடி கண்டுபிடிக்கப் போலீஸ்காரர்களை கிளப்பியிருப்பார்கள். ஆனால் இப்பொழுது நான் போட்டிருக்கும் வேஷத்தில் என்னைக் கண்டுகொள்ள முடியாது. என் பிராண சிநேகிதன் திருவேங்கடத்தாலேயே முடியாதென்றால், இவர்களாலேயா கண்டுபிடிக்க முடியும்? ஏன் நான் இந்த ஒப்பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டேன்? அப்பொழுதே என் பிராணனை மாய்த்துக்கொண்டிருந்தால் இவ்வளவு கவலையும் பயமும் ஏன்? தற்கொலை யென்றே நிர்மானித்திருப்பார்கள். திருவேங்கடம் இவ் விஷயங்களைக் கேள்விப்பட்டால் என்ன பாடு படுவானோ? நான் இப்பொழுதிருக்கும் நிலைமையை அவனுக்குத் தெரியப்படுத்தலாமென்றாலும் என் வாக்குறுதி என்னவாகும்? இது அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் என்ன செய்வார்களோ வென்றும் பயமாயிருக்கிறது. எப்படியும் போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம்." இவ்விதம் எண்ணிக்கொண்டே கண்ணயர்ந்துவிட்டான். கதவு தட்டப்படும் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டெழுந்து கதவைத் திறந்துவிட்டு மறுபடியும் தன்னாசனத்தில் அமர்ந்து பத்திரிகையை வாசிப்பதுபோல் பாசாங்கு செய்துகொண்டிருந்தான். கதவு திறக்கப்பட்டதும் ஹோடல் மானேஜர் ஓர் வாலிபனை உள்ளே அழைத்துக்கொண்டு வந்து பாலகிருஷ்ணனுக்கு அவ் வாலிபனைச் சுட்டிக்காட்டித் தான் சிபாரிசு செய்த வாலிபன் இவனே யென்றும், மற்ற விஷயங்களை இவனுடன் நேரில் பேசிக்கொள்ளலாமென்றும் சொல்லிவிட்டுக் கதவை மூடிக்கொண்டு வெளியே சென்றார். பாலகிருஷ்ணன், அப்படியே அவ் வாலிபனைச் சில கேள்விகள் கேட்டு அவன் சொன்ன பதிலால் திருப்தியடைந்து அவனைத் தன் அந்தரங்க வேலையாளாய் அமர்த்திக்கொண்டு, அவன் அவ்வறையிலுள்ளவைகளைக் கவனிப்பதைக் கண்டு "சீனு! நான் திடீரென்று ஊரைவிட்டு வந்ததினால் ஸாமான்கள் ஜாஸ்தியாய்க் கொண்டுவரவில்லை. நாம் நாளைக் காலையில் ஷாப்புக்குப் போய் வேண்டிய சாமான்களை வாங்கிவரலாம். நீ நடந்துகொள்ளவேண்டிய முறை உனக்கு நன்



றாய்த் தெரியுமென்று மானேஜர் சொன்னார். இப்பொழுது வெளியில்போய்இரு. கூப்பிடும்போது வரலாம்." என்றான்.

சீனு அவனுக்கு வணக்கமாய் வந்தனமளித்துவிட்டு வெளியில் வந்து கதவை மூடிக்கொண்டு சென்றான்.

மறுநாட் காலையில் பாலகிருஷ்ணன் சிற்றுண்டி அருந்திவிட்டு ஓர் வாடகை வண்டி யமர்த்திக்கொண்டு தான் இதுவரையிலும் வியாபார சம்பந்தம் வைத்துக்கொள்ளாத புரசைவாக்கத்திலுள்ள "பராங்குசம் அண்டு சன்ஸ்" என்னும் உடுப்புகள் தயாராய் வைத்திருக்கும் கம்பெனிக்குச் சென்று தனக்கு வேண்டிய உடுப்புகளை வாங்கிக்கொண்டு தன் இருப்பிடம் வந்துசேர்ந்தான். பிறகு பகற் போஜனமுண்டு தன் அறையில் படுத்து நித்திரைசெய்தான்.

சுமார் மூன்று மணிக்கு சீனு உள்ளே வந்து தன் எஜமானனைப் பார்த்து அவரைப் பார்க்க ஓர் பெண் வாசலில் காத்துக்கொண்டிருப்பதாகவும் தான் என்ன சால்சாபுகள் சொல்லியும் அவசியம் அவரைப் பார்க்கவேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பதாயும் சொன்னான்.

பாலகி:—யார்? ஓர் பெண்ணா? அவள் பெயரென்ன? எப்படியிருக்கிறாள்? யாரைக் காணவேண்டுமென்கிறாள்?

சீனு:—தங்களைக் காணவேண்டுமாம். பத்மநாபனைக் காணவேண்டுமாம். அவளைப் பார்த்தால் ஓர் சீமாட்டியைப் போல் காணப்படுகிறாள். பெயரைச் சொல்லவேண்டிய அவசியமில்லை யென்றும், தங்களை அவசியமாய்க் காணவேண்டுமென்றும் சொல்லுகிறாள்.

பாலகி:—ஸரி. அழைத்துவா. (என்று கொஞ்சம் பயத்துடன் சொன்னான்.)

சீனு சென்றதும் பர்லகிருஷ்ணன் "தான் வந்து ஒரு நாள்கூட ஆகாமலிருக்கத் தன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கும் பெண் யாரோ? தன்னைக் கண்டுபிடித்துவிடுவாளாகில் தன் கதி என்னவாகுமோ?" என்றும், தான் ஏன் ஒப்பந்தத்தில் சிக்கிக்கொண்டோமென்றும் எண்ணிக்கொண்டி

ருக்கையில் கதவு திறக்கப்பட்டதும் ஓர் மாது தன்முன் நின்றாள். அப்பெண் சற்று உயரமுள்ளவளாகவும், மிக்க அழகு வாய்ந்தவளாகவும், நாணயமான உடைகள் தரித்துக்கொண்டும், விலையுயர்ந்த ஆபரணங்கள் அணிந்துகொண்டும், தன் முகத்தை முகமூடியால் மறைத்துக்கொண்டுமிருந்தாள். அவளுக்கு வயது சுமார் பதினாறு அல்லது பதினேழு இருக்கலாம். அவளைக் கண்டதும் பாலகிருஷ்ணன், தனது ஆசனத்திலிருந்து எழுந்து, அவளை வரவேற்று, ஓர் ஆசனத்தில் அமரும்படியாய் வேண்டிக்கொண்டான். அவளும் அவ்விதமே உட்கார்ந்துகொண்டாள்.

பாலகி:—அம்மணி! என் பெயர் பத்மநாபன். என்னைக் காணவேண்டித்தான் வந்தீர்களோ?

பெண்:—ஐயா பத்மநாபரே! நான் திடீரென்று உம்மைக் காணவந்ததைப்பற்றி மன்னிக்கவேண்டும்.

பாலகி:—பாதகமில்லை. தங்கள் நாமதேயம் என்னவோ?

உடனே அப் பெண் கதவின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவளது கருத்தை உணர்ந்த பாலகிருஷ்ணன் "நீங்கள் தாராளமாய்ப் பேசலாம். யாரும் உற்றுக் கேட்கமாட்டார்கள். வேலைக்காரனும் மிகவும் நம்பிக்கையுள்ளவன்." என்று சொன்னான். ஆனால் அவள் ஒன்றும் பேசாமல் பாலகிருஷ்ணனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். இதைக் கண்ட பாலகிருஷ்ணன் கொஞ்சம் திடுக்கிட்டான். எங்கே அவள் தன்னைக் கண்டுபிடித்துவிடுவாளோ வென்று அஞ்சினான். அல்லது அரங்கநாதனே தன்னைக் காட்டிக்கொடுத்துவிட்டானோ வென்று எண்ணினான்.

பெண்:—என் பெயர் குமுதவல்லி. நான் தங்களை இதற்கு முன் பார்த்ததேயில்லை. இப்படித் துணையின்றி திடீரென்று இங்கு வந்ததே பிசகு. உங்களைப்பற்றி உங்கள் வேலைக்காரனை விசாரித்துக்கொண்டிருக்கையில் அவனும் என்னை ஒருவிதமாய்க் கவனித்தான்.

பாலகி:—அம்மா குமுதவல்லி! எனக்குத் தாங்கள் அளித்த இப் பெரிய மரியாதைக்காக மிக்க நன்றியுள்ளவனானேன். தாங்கள் வந்த காரியமென்னவோ?



குமுதம்:—எல்லாம் தங்கள் நன்மைக்கே.

பாலகி:—என் நன்மைக்கா? ஒன்றும் விளங்கவில்லையே. கொஞ்சம் விபரமாகச் சொல்லவேண்டும்.

குமுதம்:—நான் தங்களை இதுவரையில் பார்த்ததே கிடையாது. அப்படியிருந்தபோதிலும் தங்கள் நன்மைக்காக நான் வந்திருப்பது உங்களுக்கு ஆச்சரியமாய்த் தோன்றவில்லையா?

பாலகி:—எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. என் பூடகமாய்ப் பேசவேண்டும்? கொஞ்சம் விளங்கும்படி சொல்லலாகாதா?

குமுதம்:—முதலில் உமக்குத் தெரிந்திருக்கும் ரகஸியமொன்றைச் சொல்லுகிறேன்.

பாலகி:—சொல்லுங்கள் பார்ப்போம்.

குமுதம்:—முதலில் உம்முடைய பெயர் பத்மநாபர் அல்ல.

இதைக் கேட்டதும் பாலகிருஷ்ணன் திடுக்கிட்டான். பயத்தினால் முகம் வெளுத்துவிட்டது. குபீரென்று வியர்வை கிளம்பிவிட்டது. இருந்தபோதிலும் தன்னை ஒருவிதமாய்ச் சமாளித்துக்கொண்டு "அம்மா குமுதம்! நீங்கள் சொல்லுவது மிக்க விந்தையாய்க் காணப்படுகிறதே. இதைச் சொல்லவா இவ்வளவு சிரமமெடுத்துக்கொண்டு இங்கே வந்தது?" என்று ஒன்றும் அறியாதவன்போல் புன்சிரிப்போடு கேட்டான்.

குமுதம் "இல்லை, நீங்கள் தப்பாய் எண்ணிவிட்டீர் போல் காண்கிறது. தாங்கள் நேற்றைய முந்தின இரவு பவழக்காரத் தெரு 31 நெ. வீட்டிற்குச் சென்று, சில கனவான்களோடு ஒரு உடன்படிக்கை செய்துகொண்டதைச் சொன்னால் இன்னும் ஆச்சரியப்படுவீர். அவ்வுடன்படிக்கை இருபத்தி நாலாயிர ரூபாய்களுக்கு என்றும், தங்கள் சொந்தப் பெயராகிய பாலகிருஷ்ணன் என்பதை மாற்றி பத்மநாபன் என்னும் பெயருடன் இங்கு வசிக்க வந்திருப்பதையும் சொன்னால், இன்னும் அதிகமாக ஆச்சரியப்படுவீர்களல்லவா?" என்றாள்.

தான் முன்னிருந்தமாதிரியாக இல்லாமல், தன் அழகிய அரும்புபோன்ற மீசையை எடுத்துவிட்டும், ஸதா மூக்குக் கண்ணாடி அணிந்துகொண்டும், தான் ஒருநாளும் அணிந்துகொண்டிராத மேல்நாட்டு உடைகளை அணிந்துகொண்டிருந்தபோதிலும்கூட, இப் பெண்மணி தன்னைக் கண்டுபிடித்ததில் மிகவும் ஆச்சரியமும் பீதியுமடைந்து "இது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று குமுதத்தைக் கேட்டான் பாலகிருஷ்ணன்.

குமுதம் "பேச்சை வளர்த்திக்கொண்டுபோவதில் பிரயோஜனமில்லை. மேலும் எனக்கு இங்கு நிற்கச் சாவகாசமும் கிடையாது. உங்களுக்கும் அரங்கநாதன் முதலியவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம் எனக்குத் தெரியுமென்பதே போதுமானது. உங்களை எச்சரிக்கவே எனக்கு நேரிடக்கூடிய ஆபத்தையும் லக்ஷியம்செய்யாமல் துணிந்து இவ்விடம் வந்தேன்." என்றாள்.

பாலகி :—எதைப்பற்றி என்னை எச்சரிக்க? அதனால் தங்களுக்கு என்ன ஆபத்து ?

குமுதம்:—அவர்களின் சூழ்ச்சிகளைப்பற்றியும் அவர்களின் முடிவான அபிப்பிராயத்தைப்பற்றியும் தான். ஆனால் அதை நீங்கள் அறியமாட்டீர்.

பாலகி :—அவர்களின் சூழ்ச்சி என்ன ?

குமுதம் :—கெட்ட எண்ணம்தான்.

பாலகி :—என்னைப்பற்றியவரையில் அப்படியிராதென்றே நினைக்கிறேன்.

குமுதம் :—அப்படியன்று. உம்மைப்பற்றியவரையில் அப்படித்தான். ஆகையால் நீங்கள் சர்வ ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். உமக்கு நம்பிக்கையுள்ள சிநேகிதர்கள் இருந்தால் அவர்களிடம் நடந்தவற்றைச் சொல்லி உமக்குத் துணையாய் வைத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அச் சிநேகிதர்கள் இந்த ரகசியத்தை வெளியிடாத நம்பிக்கையுள்ளவர்களாய்



இருக்கவேண்டும். மேலும் இவ் விஷயத்தை நான் உமக்குத் தெரிவித்ததாய் அவர்களுக்குத் தெரிந்துவிட்டால் நான் இறக்கவேண்டிவரும். இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும். நான் இதை தெரிவித்ததாக ஒருவருக்கும் சொல்லக்கூடாது. ஜாக்கிரதையாய் இரும்.

பாலகி :—ஸரி. அப்படியே நடக்கிறேன். ஆனால் அந் நால்வர்கள் யார்? அவர்கள் ஏதாவது அபாயகரமான கூட்டத்தைச் சேர்ந்தவர்களோ ?

குமுதம் :—அப்படியொன்றுமில்லை. அவர்கள் யார் என்பதே எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் உம்மிடம் கொண்டுள்ள கெட்ட எண்ணம் மட்டுமே எனக்குத் தெரியும்.

பாலகி :—ஆகையால் அவர்கள் எனக்குத் தீங்கு செய்யத் தீர்மானித்திருப்பதாகவே காண்கிறதே.

குமுதம் :—ஆம். ஆனால் உங்களை எச்சரிக்க மாத்திரம் என்னால் முடியும். நீங்கள் உங்களுடைய உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய ஏற்பாடுகளை செய்துகொள்ள வேண்டிக்கொள்ளுகிறேன்.

பாலகி :—அம்மா! இது விஷயத்தை எனக்குச் சொன்னதற்கு மிகவும் வந்தனம். அவர்கள் எண்ணம் நிச்சயமாய் எனக்குத் தெரியவே தெரியாது. ஆனால் என் இரகசியத்தை (நான் பாலகிருஷ்ணன் என்னும் விஷயத்தை) மட்டும் தாங்கள் காப்பாற்றவேண்டுமென்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

குமுதம் :— இதற்கு பதில் ஒன்றும் சொல்லாமல் தன்னாசனத்திலிருந்து எழுந்து) எனக்கு நாழிகையாகிவிட்டது. இவ்வளவு நாழிகை நான் இங்கிருந்ததே தப்பிதம். நான் விட்[illegible] தெரிந்துவிட்டால்—

பாலகி :—தெரிந்[illegible]லென்ன ?

குமுதம் :—ஒன்றுமில்லை, நான் போய்வருகிறேன்; நாமிரு வரும் ஒருக்கால் சந்திக்கும்படி நேரிட்டால் முன்பின் அறியாத அன்னியர்போல் நடந்துகொள்ள வேண்டும். நான் இங்கு வந்ததே பிசகு. ஆனால் இவ் விஷயம் எனக்குத் தெரிந்த பிறகு உங்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டியது எனது கடமை.

பாலகி :—வரும் ஆபத்தையும் கவனியாமல் எனக்கு எச்சரிக்கை செய்த உமக்கு நான் என் மனமார்ந்த வந்தனம் செலுத்துகிறேன். (என்று அவளை நோக்கியதும் அவள் கழுத்திலிருந்த ஓர் பதக்கத்தைக் கண்டான். கண்டதும் திடுக்கிட்டான். மறுபடியும் அதை நன்றாய் கவனித்தான். தான் வெளிநாடுகளில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபொழுது காஷ்மீரத்தின் தலைநகராகிய ஸ்ரீநகரத்தில் ஓர் மார்வாரியிடம் ரூபாய் ஐநூறுக்கு வாங்கியதும், தலையில் மிக்க வேலைப்பாடுள்ள கணபதியின் உருவம் அமைக்கப்பெற்றிருந்ததும், அது அபூர்வமாய் இருந்ததினால் அதற்கு அப் பெருந்தொகை கொடுத்து தான் வாங்கினதுமான அதே பதக்கமாகவே இருந்தது.) நல்லது நீங்கள் சொன்னபடியே செய்கிறேன். போய்வாருங்கள். (என்று சொல்ல குமுதவல்லியும் அவ் வறையைவிட்டு வெளிச் சென்றாள்.)

அவள் சென்றதும் பாலகிருஷ்ணன் கதவைத் தாளிட்டுக்கொண்டு தன் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு பின் வருமாறு தனக்குள் சொல்லிக்கொண்டான்.—

"என்ன ஆச்சரியம்? இந்தப் பதக்கத்தை எனது நண்பன் திருவேங்கடத்திற்கல்லவோ கொடுத்தேன். ஆ தெய்வமே! இவள் எனது நண்பன் திருவேங்கடத்தின் காதலி என்று இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன். ஒரு வருஷகால[illegible] தான் ஒரு [illegible]ணை நேசித்து வருவதாகவும், அ[illegible] சென்னையி[illegible] [illegible]கரவதிகளில் முதன்மைய[illegible]ளென்றும், கல்யாண[illegible] பிரபுவின் ஏக புத்



திரியாகிய காமாக்ஷிப் பெருமாட்டியென்றும், நான் கொடுத்த பதக்கத்தை என் ஞாபகார்த்தமாய் அவளுக்குக் கொடுத்திருப்பதாகவும், எனது நண்பன் சொன்னானே. அவள் ஏன் தனது பெயரை மாற்றிக் குமுதவல்லியென்று சொல்லவேண்டும். ஆகையால் இந்த இரகஸியம் ஜாஸ்தியாய்விட்டதே."

---

## அத்தியாயம் 4.

குமுதவல்லியம்மாள் சென்றதும் பாலகிருஷ்ணன் என்னதெல்லாம் எண்ணி மனமேங்கியவாறே தன் வேலைக்காரனை அழைக்க மேஜையின்மேலிருந்த மணியை அடித்தான். அடுத்த நிமிஷம் சீனு தன் எஜமானர்முன் நின்று "ஐயா! தாங்கள் அப் பெண்ணிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது உம்மைக் காண ஒருவர் வந்தார். நீங்கள் வெளியில் போயிருப்பதாய்ச் சொல்லி அனுப்பிவிட்டேன். அப் பெண் வெளியே சென்றதும் உம்மிடம் தெரிவிக்கவே வந்துகொண்டிருந்தேன். தாங்களும் என்னை அழைத்தீர்கள்." என்று மிக்க வணக்கமாய்ச் சொன்னான்.

பாலகி :—என்ன? ஓர் மனிதனா என்னைக் காணவந்தான்? அவன் யார்?

சீனு :—அவர் பெயரைத் தெரிவிக்கும்படி இரண்டு மூன்று தடவை கேட்டேன். அவர் அதற்குப் பதிலளிக்காமல் நாளை வருவதாய்ச் சொல்லிப்போனார்.

பாலகி :—அவன் வேறு ஏதாவது சொன்னானோ?

சீனு :—உமது விஷயங்களைத் தெரிந்துகொள்ள மிக்க அவாக்கொண்டவராய்க் காணப்பட்டார். நான் எவ்வளவு காலமாய்த் தங்களிடம் வேலையாய் இருக்கிறேனென்றும், தாங்கள் எப்பொழுது இங்கே வந்தீர்களென்றும், உங்களைக் காண சிநேகிதர்கள் வருவதுண்டாவென்றும் பலவித கேள்விகள் கேட்டார்.

பாலகி:—நீ என்ன பதிலளித்தாய்?

சீனு:—நானா பதிலளிப்பவன்? எனக்குப் பிரபுக்களின் சகவாசம் அதிகமுண்டு. நான் எனது பத்தாவது வயதில் தேவசுந்தரம் பிரபுவின் கையாளாக அமர்ந்தேன். எனக்கு இப்பொழுது இருபத்தைந்து வயதாகிறது. இப் பதினைந்து வருஷங்களாய் அவரிடம் நான் பழகியதில், அன்னியர்கள் தன் யஜமானனைப் பற்றிக் கேழ்க்கும் கேழ்விகளுக்கு பதில் சொல்லாமலிருந்தலையும் எஜமானரிடம் உண்மையாய் இருந்தலையுமே கற்றுக்கொண்டேன். அவருக்குச் சரியான பதில் கொடுக்கவில்லை.

பாலகிருஷ்ணன், இதைக் கேட்டு வந்தவன் ஒருக்கால் தன் விரோதிகளில் ஒருவனாக இருக்கலாமோ வென்று எண்ணி, சீனுவிடம் அவனது அங்க அடையாளங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு தன் மனதில் பதிந்துகொண்டான். மேலும் தான் பத்மநாபராய் மாறிய மறுதினமே தனக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை எண்ணி வருந்தினான்.

மறுநாட் காலையில் சீனு இரண்டு கடிதங்களை மேஜையின்மேல் வைத்துக் கதவை மூடிக்கொண்டு சென்றான். பாலகிருஷ்ணன் அக் கடிதங்களைப் பிரித்துப் பார்க்க அதில் ஒன்று தர்ம கைங்கரியமாக அவனைக் கொஞ்சம் தர்மம் செய்யும்படியாய் எழுதப்பட்டிருந்தது. மற்றொரு கடிதமோ திருச்சிராப்பள்ளியிலிருந்து வேலு என்பவன் தன்னைக் காண மறுநாள் வருவதாகவும், சில முக்கியமான விஷயங்களைப்பற்றி பேசவேண்டியதாயிருப்பதால் வெளியே எங்கும் போகாமல் இருக்கும்படிக்கும் எழுதியிருந்தது. இதைப் பார்த்ததும் அம் மனிதன் யாரோவென்றும் எந்த விஷயமாய்ப் பேசப்போகிறானோவென்றும் கவலை ஜாஸ்தியாய்விட்டது. இக் கடிதங்களால் பத்மநாபர் என்பவர் உயிருடன் இருப்பதாகவும் அரங்கநாதன் சொன்னது சுத்தப் பொய் என்றும் வியக்தமாய் விளங்கியது. ஆகையால் பகலில் வெளியில் புறப்பட அஞ்சினவனாய், தன்னைப்



பற்றிய விஷயம் ஏதாவது பத்திரிகைகளில் இருக்கிறதாவென்று அவைகளைப் பார்த்துக்கொண்டு தன் காலத்தைக் கழிக்கலானான். சுமார் மூன்று மணிக்கு சீனு ஓர் கடிதம் கொண்டுவந்து கொடுத்தான். அதைப் பிரித்து பார்க்கையில் அரங்கநாதனுடைய கையெழுத்தாய்க் காணப்பட்டது. ஆனால் அதில் கையெழுத்தாவது, தேதியாவது, அனுப்பியவர் விலாஸமாவது காணப்படவில்லை. அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"ஐயா பத்மநாபரே! தங்களுக்குச் சேரவேண்டிய ரூபாய் ஐநூறையும் உமது பழைய பெயரால் உம்முடைய பழைய பாங்கியில் கட்டுவது பிரயோஜனமற்றதாகும் எனக் கருதி அதை மைலாப்பூரிலுள்ள "தன நிதி" என்னும் பாங்கியில் பத்மநாபர் என்னும் பெயரால் கட்டப்பட்டிருக்கிறது. பேரேடும் ஏற்படுத்தியிருக்கிறேன். பணம் கட்டியதற்கு ரசீது இத்துடன் அனுப்பியிருக்கிறேன்."

இவ்விதம் எழுதியிருப்பதைக் கண்ட பாலகிருஷ்ணன் அரங்கநாதன் மிக்க நுண்ணறிவுள்ளவனென்றும் மூன்யோஜனையுள்ளவனென்றும் நன்றாய்த் தெரிந்துகொண்டான். பிறகு சில சாமான்கள் வாங்கிவரும்பொருட்டு வண்டியிற் போய்க்கொண்டிருக்கும்பொழுது தனக்கு அறிமுகமான சிநேகிதன் எதிரில் வரக் கண்டு, அவன் தன்னைத் தெரிந்துகொள்ளாவண்ணம் தன் முகத்தைப் பத்திரிகையால் மறைத்துக்கொண்டு, இனி வெளியே சென்றால் தான் கண்டுபிடிக்கப்படுவது நிச்சயமென்று தெரிந்துகொண்டு மூன்று நாட்கள் வெளியே செல்லாமல் தன் அறையிலேயே காலங்கழித்தான். ஆனால் வெளியே போகாமலும், தன் நண்பர்களைக் காணாமலும், யாதொரு விதமான பேச்சுத்துணையின்றி ஜெயிலில் அடைபட்டவன்போல் தன்னால் இருக்கமுடியவில்லை. தனது நண்பன் திருவேங்கடம் தன்னைக் காணாமலும், தன் சங்கதி யாதொன்றும் தெரியாமலும், என்ன அபாயமுற்றிருக்கிறானோவென்றும், தன்னைப்பற்றி என்ன நினைக்கிறானோ வென்றும் எண்ணம் தோன்ற, தனக்குத் குமுதவல்லி தெரிவித்த

விதம், அவனுக்குத் தன் விருத்தாந்தத்தை ரகஸியமாய்த் தெரிவித்து இச்சிக்கலான விவகாரத்திலிருந்து தானும் அவனும் சேர்ந்து உழைத்துத் தன்னை விடுவித்துக்கொள்ளக் கூடாதாவென்றும், அப்போதே அவனுக்குத் தெரிவிப்பதே உசிதமென்றும் தீர்மானித்துக் கொண்டு, உடனே தன்னை வந்து காணும்படி திருவேங்கடத்திற்கு ஒரு கடிதமெழுதி அதைச் சீனுவிடம் கொடுத்து, அதைத் தனது நண்பன் திருவேங்கடத்தினிடம் அதி ரகஸியமாய் நேரில் கொடுத்துவரும்படி கட்டளையிட்டான். சீனு சென்ற ஒரு மணி நேரத்தில் திருவேங்கடம் பாலகிருஷ்ணன் அறைக்குள் வந்து பாலகிருஷ்ணனைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி குழந்தையைப்போல் அழுதான். பாலகிருஷ்ணனும் தன் நண்பன் படும் துயரத்தைக் கண்டு கண்கலங்கினான். ஆனாலும் தைரியத்தைக் கைவிடாமல் திருவேங்கடத்தைத் தேற்றினான். உள்ளே ஒருவரும் வராமலிருக்கும்படி சீனுவுக்கு உத்திரவு செய்து கதவை உள்பக்கம் தாளிட்டுக் கொண்டான்.

திருவே:—பாலு! என்ன இது? இக்கோலம் காணச் சகிக்கவில்லையே. உன்னைக் காணாமல் உன் கதி என்னவாயிற்றோ வென்று கவலையால் இரவும் பகலும் ஊண் உறக்கமின்றி நான் பட்ட பாடு தெய்வத்திற்குத்தான் தெரியும். நான் செய்த புண்ணியவசத்தால் உன்னைக் கண்டேன். இந்த விஷயத்தை ஏன் முன்னதாகவே எனக்குத் தெரியப்படுத்தியிருக்கக் கூடாது? விஷயமென்ன? விபரமாய்ச் சொல்.

பாலகி:—நண்பா! பாலகிருஷ்ணன் என்னும் பெயர் இறந்து பத்மநாபர் என்னும் பெயருடன் இவ்வைந்து நாட்களாய் இங்கே வசித்துக்கொண்டுவருகிறேன்.

திருவே:—ஏன்? என்ன காரணம்பற்றி?

பாலகி:—முதலில் ஜனங்கள் என்னைப்பற்றி வெளியே என்ன சொல்லிக்கொள்ளுகிறார்கள்? அதைச் சொல்.

திருவே:—நீ பாபராய்ப் போய் கடன்காரர்களுக்குப் பயந்து எங்கேயோ ஓடிப்போய்விட்டதாகச் சொல்லிக்



கொள்ளுகிறார்கள். மற்றப்படி உன்னைப்பற்றிய பிரஸ்தாபம் விசேஷமாய்க் காணோம்.

பாலகி:—ஆம்; அதைத் தவிர நான் தகாத காரியம் செய்துவிட்டிருப்பதாய்ச் சொல்லிக்கொள்ளவில்லையா? ஏன் மறைக்கிறாய். உண்மையைச் சொல்.

திருவே:—நீ கேட்டதனால் சொல்லுகிறேன் கேள். நேற்றைய தினம் கிளப்புக்குச் சென்றிருந்தேன். அங்கே நமது நண்பன் மணியன், நீயேதோ தப்புச் செய்திருப்பதாயும், அதற்காகப் போலீஸ்காரர் உன்னைத் தேடிக் கொண்டிருப்பதாயும் சொன்னான்.

பாலகி:—அப்படியானால் நான் வெளியே வந்தால் ஆபத்தாய் முடியும்போல் காண்கிறதே?

திருவே:—ஆம். அதிருக்கட்டும். நீ இப்போதிருக்கும் நிலைமையைப்பற்றிய விஷயங்களை விபரமாய்ச் சொல்லவேண்டும்.

உடனே பாலகிருஷ்ணன் தான் தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்து ஆற்றோரம் சென்றதுமுதல் நாளது வரையில் நடந்த சமாசாரமனைத்தையும் ஆதியோடந்தமாகச் சொன்னான். ஆனால் தன்னை உஷார்ப்படுத்த தன்னிடம் வந்த பெண் காமாக்ஷி என்பதைமட்டும் சொல்லவில்லை.

திருவே:—நல்லது. அவர்கள் ஒப்பந்தப்படி உனக்குக் கொடுத்ததாய்ச் சொன்ன தொகையை நோட்டாகவா அல்லது ரூபாய்களாகவா கொடுத்தார்கள்?

உடனே பாலகிருஷ்ணன் எழுந்துபோய் தனக்குச் செலவானது போக பாக்கியிருந்த ரூபாய் நானூற்றையும் பெட்டியிலிருந்து எடுத்துவந்து மேஜையின்மேல் வைத்தான். அதைக்கண்டு திருவேங்கடம் "பாலு! அவர்கள் உனக்கு அத் தொகையை ரூபாய்களாகக் கொடுத்ததில் ஏதோ விசேஷமிருக்கவேண்டும். சரிதான். தெரிந்துகொண்டேன். நோட்டுக்களாய்க் கொடுத்தால் அவைகளைக் கொண்டு தங்களை எப்படியாவது கண்டுபிடித்துவிடுவாய்

என்று பயந்தே இப்படிச் செய்திருக்கிறார்கள். ஆகையால் நான் அவர்களைக் காணும்படியாய் நீ தான் செய்யவேண்டும்.'' என்றான்.

பாலகி:—நீ அவர்களைப் பார்க்கவேண்டுமானால், கம்பெனியின் பெயரால் அவர்கள் வீட்டிற்குப் போய்ப் பார்ப்பதுதான் உசிதம். அப்படிச் செய்தால் அவர்களுக்குச் சந்தேகம் ஏற்படாது.

திருவே:—இது விஷயங்களை யோஜித்துப் பார்க்கும்போது இதில் ஏதோ சூது இருப்பதாய் எனக்குத் தோன்றுகிறது. இன்றைக்கே பவழக்காரத் தெருவிற்குப் போய் அவர்களைப் பார்க்கவேண்டுமென்கிற அவா ஜாஸ்தியாய் இருக்கிறது.

பாலகி:—நீ அப்படியே செய். நீ என் தோழன் என்பதை அவர்கள் அறியமாட்டார்கள்.

திருவே:—ஸரி. அப்படியே இதோ சென்று ஒருமணி நேரத்தில் திரும்பிவருகிறேன். (என்று சொல்லிவிட்டு அவ் வீட்டின் நெம்பர் அடையாளம் முதலியவைகளை கேட்டுத் தெரிந்துகொண்டு வெளியே சென்றான்.)

திருவேங்கடம், சென்ற ஒருமணிக்குள் திரும்பிவந்து பாலகிருஷ்ணனைப் பார்த்து, "பாலு! அவ் வீட்டின் கதவு பூட்டப்பட்டிருக்கிறது. காவலுக்கும் ஒருவரையும் காணோம். வீட்டில் ஒருவரும் வசிப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் அவர்கள் ஓடிவிட்டாற்போல் காணப்படுகிறது. இன்றிரவு பத்துமணிக்குமேல் நாமிருவரும் அவ் வீட்டிற்குள் செல்லும் வழியைத் தேடுவோம். என்னிடம் வைர ஊசி இருக்கிறது. வீட்டின் பக்கத்து ஜன்னலின் கண்ணாடியை அறுத்து ஜன்னலைத் திறந்து உள்ளே போகலாம்'' என்று சொன்னான்.

இதற்குப் பாலகிருஷ்ணனும் சம்மதிக்க பத்துமணி வரையில் அவர்கள் அனேக விஷயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்து சினுவால் கொண்டுவரப்பட்ட ஆகாரத்தை



அந்த அறையிலேயே புசித்தார்கள். மணியும் பத்தரையாக இருவரும் ஹோட்டலைவிட்டுப் புறப்பட்டு சுமார் பதினொருமணிக்குப் பவழக்காரத்தெருவை அடைந்தார்கள். நாழிகை ஜாஸ்தியாய்விட்டபடியால், தெருவில் சந்தடி அடங்கி ஒரே நிச்சப்தமாயிருந்தது. அவர்கள் அவ் வீட்டை யடைந்ததும் பாலகிருஷ்ணன் அவ் வீட்டின் வாசலிலுள்ள எலக்டிரிக் காலிங் பெல் பொத்தானை அழுத்தினான். உடனே உள்ளே மணிச்சத்தம் கேட்டது. அதற்கு யாதொரு பதிலுமில்லை. மறுபடியும் பொத்தானை அழுத்த அதற்கும் பதில் கிடைக்கவில்லை. இதிலிருந்து வீட்டில் ஒருவருமில்லையென்று தெரிந்துகொண்டார்கள். உடனே திருவேங்கடம் அவ் வீட்டின் பக்கத்து ஜன்னலின் கண்ணாடியை ஊசியாலறுத்து எடுத்துவிட்டு அவ் வழியாய் கையை உள்ளே விட்டு ஜன்னலைத் திறந்துவிட்டான். ஜன்னல் கம்பியில்லாத ஜன்னலானபடியால் சிரமமின்றி இருவரும் உள்ளே சென்றார்கள். வீட்டின் உட்பக்கம் ஒரே இருட்டாக இருந்தபோதிலும், பாலகிருஷ்ணன் ஒரு தடவை அங்கு வந்தவனாகையால், இருவரும் தட்டித்தடுமாறிக் கொண்டு மெத்தைப் படிக்கட்டை அடைந்து அவ் வழியாக மெத்தையின் கூடத்தை அடைந்தார்கள். அவ் வீட்டில் ஒருவரும் இருப்பதாய்த் தெரியவில்லை. அவ் வீடு காலியாயிருக்க, விளக்கை ஏற்றினால் அவ் வெளிச்சம் வெளியே தெரியும்பக்ஷத்தில் ஏதாவது கலவரம் ஏற்படக்கூடுமென்று யோஜித்து, அன்று பாலகிருஷ்ணன் சென்ற அறையை அடைந்தார்கள். அதன் கதவு பூட்டப்பட்டிருந்தது. அப் பூட்டைத் திருவேங்கடம் தன்னிடமுள்ள மாஸ்டர் சாவியால் திறந்து உள்ளே சென்று கதவை மூடித் தாளிட்டு மின்சாரவிளக்கை ஏற்றினார்கள். அந்த அறை பாலகிருஷ்ணன் அன்று பார்த்தபடியே யாதொரு மாறுதலுமில்லாமலிருந்தது. திடீரென்று திருவேங்கடம் ஆச்சரியத்தாலும் பயத்தினாலும் ஓர் கூச்சல் போட்டான். பாலகிருஷ்ணன் நடுநடுங்கித் திருவேங்கடத்தை "என்ன? என்ன?" என்று கேட்டான். திருவேங்கடம் "என்னவா? அதோ அந்த மேஜையின் சமீபமாய் சுவரோரத்தில் கம்பளத்தின்

மீது பார். ஆ தெய்வமே!" என்று அலறிக்கொண்டு சுவற்றின்மேல் சாய்ந்தான்.

---

## அத்தியாயம் 5.

திருவேங்கடம் கூறியவாறே பாலகிருஷ்ணன் பார்க்க ரத்தினகம்பளத்தின்மேல் மல்லாந்து விழுந்துகிடந்த பிணமொன்றைக் கண்டு திடுக்கிட்டு மரம்போல் அசைவற்று நின்றான். அப் பிணம் தலைமயிர் கத்தரிக்கப்பெற்றும், மேல்நாட்டு உடை அணியப்பெற்றும், மூக்குக்கண்ணாடி போடப்பட்டுமிருந்தது. வயது சுமார் இருபது அல்லது இருபத்திரண்டு இருக்கலாம். பாலகிருஷ்ணன் சற்றுநேரம் பொறுத்துத் தன்னைச் சமாளித்துக்கொண்டு அதனிடம் சென்று உற்றுப்பார்க்க அதன் முகம் தனக்கு அறிமுகமாகக் காணப்பட்டது.

திருவே:—பாலு! அதைப் பார். நன்றாய்ப் பார். உனக்குக் கண்ணில்லையா? உற்றுப்பார்.

பாலு:—நீ சொல்லுவது விளங்கவில்லையே. நன்றாகத்தானே பார்க்கிறேன். (என்று சொல்லி அதனிடம் நெருங்கிக் குனிந்து அதை உற்றுப்பார்த்து) ஒன்றும் தெரியவில்லையே. (என்றான்.)

திருவே:—அப்படியா? அந் நிலைக்கண்ணாடியிற் பார்?

பாலகி:—(அவ்விதமே நிலைக்கண்ணாடியிடம் சென்று பார்க்க திடுக்கிட்டு அச் சவத்தின் முகமும் தன் முகமும் ஒன்றாக இருக்கக் கண்டான்.) ஆ தெய்வமே! என் முகமும் சவத்தின் முகமும் ஒன்றாகவன்றோ இருக்கின்றன. இதன் விஷயம் விளங்கவில்லையே.

திருவே:—இதில் ஏதோ சூது இருக்கிறது. அதன் உண்மையைக் கட்டாயம் கண்டுபிடித்தே தீரவேண்டும்.



பாலகி:—ஆம். அது நம்மால் முடியுமானால்—(என்று சொல்லிக்கொண்டே சவத்தின் முகத்தையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான்.)

திருவேங்கடம் சவத்தின் முகத்தை தொட்டுப்பார்க்க அது பனிக்கட்டியைப்போல் ஜில்லென்றிருந்தது. அதன் மேல் சொக்காயை கொஞ்சம் விலக்கி மார்பைத் தொட்டுப் பார்க்க யாதொருவிதமான துடிப்பும் காணப்படவில்லை.

திருவே:—பாலு! இவன் இறந்து வெகு நேரமாயிருக்குமென்று காணப்படுகிறது.

பாலகி:—இவனிடத்தில் இரத்தக்கரை முதலானவைகள் எதையும் காணோம். ஒருக்கால் சாதாரணச் சாவாக இருக்குமோ?

திருவே:—இல்லை. இவன் கொலை செய்யப்பட்டோ அல்லது தற்கொலை செய்துகொண்டோ இருக்கவேண்டும். மேலும் இவன் விஷத்தினால் இறந்திருக்கவேண்டும். நான் டாக்டரல்லாவிட்டாலும் இவன் கீழுதட்டின் நிறத்தால் அப்படித்தான் இருக்கவேண்டுமென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். மேலும் இவன் உள்ளே இருக்க, கதவு வெளிப்பக்கம் பூட்டியிருப்பதால் இவன் கொலை செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பது நிச்சயம்.

பாலகிருஷ்ணனும் பிணத்தின் உதடுகளை நன்றாய்க் கவனித்துப் பார்த்து அப்படித்தானிருக்கவேண்டுமென்று சொல்லி மேஜையின் மேலிருந்த சாராயக் குப்பியையும் அப் பிணத்தின் பக்கத்தில் கிடந்த கோப்பையையும் பார்க்க அவைகள் வரண்டு காலியாய் இருப்பதைக் கண்டான். அதிலிருந்து அம் மனிதன் அம் மேஜையின் பக்கத்திலுள்ள நாற்காலியில் உட்கார்ந்து சாராயம் குடித்திருக்கவேண்டுமென்றும், விஷம் தலைக்கேறி அப்படியே புரண்டு கீழே விழுந்திருக்கவேண்டுமென்றும் எண்ணினான். அக் கோப்பை கிடந்தவிடத்தில் கம்பளத்தின்மேல் கொஞ்சம் கரையிருந்தது. அதைத் தன் விரலால் தொட்டுப்பார்க்க

கொஞ்சம் ஈரமாக இருந்தது. அவ் விரலை முகர்ந்து பார்க்கச் சாராய வாசனை வீசியது.

திருவே :—பாலு! விஷத்தினால் இறந்தவர்கள் முகம் மிக்க விகாரமுள்ளதாக விருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இங்கே அப்படி யொன்றையும் காணோமே?

பாலகி :—நான் விஷத்தைப்பற்றிய ஓர் புஸ்தகத்தை வாசித்திருக்கிறேன். அதில் விஷத்தின் தன்மைக்கேற்றவாறே சாவும் இருக்குமென்று கூறியிருந்தது. ஆகையால் இவன் உடனே இறக்கும்படியான விஷம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும் இப் பிணத்தை உள்ளே வைத்துப் பூட்டியிருப்பதைப் பார்த்தால், இவனைப்பற்றி சதியாலோசனை நடந்தே இவனை இங்கு வரவழைத்து அவன் எதிர்பாராவண்ணம் கொன்றிருக்கவேண்டும். மேலும் இவன் ரூபத்தில் என்னைப் போலவே இருக்கிறான். ஆகையால் இதில் ஏதோ மர்மம் இருந்தே தீரவேண்டும்.

திருவே :—ஆம். நீ சொல்வதும் வாஸ்தவம்தான். இதை நினைக்க எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. இவன் யார் என்பதே தெரியவில்லை. இவன் யாரவனென்பதைக் கண்டுபிடிக்கக்கூடிய வஸ்துக்கள் ஏதாவது இவனிடமிருக்கலாம். ஆகையால் இப் பிணத்தை நன்றாய்ப் பரிசோதித்துப்பார்ப்போம்.

அவ்விதமே அவ்விருவர்களும் அப் பிணத்தின் மேல் சொக்காய், உள் சொக்காய்ப்பைகள், நிஜாரின் பைகள் முதலியவற்றைச் சோதித்துப் பார்க்க உள் சொக்காய்ப் பையில் ஒரு பேனாக்கத்தியும் பத்துரூபாய் நோட்டு ஒன்றும், நிஜார் பையில் ஒரு கொத்து சாவிகளும் கொஞ்சம் சில்லரை நாணயங்களும் இருந்தன. அவன் மேல் சொக்காய்ப் பையில் தங்க கொலுசோடுகூடிய கைக் கெடிகாரமும், ஒரு பவுண்டன் பேனாவும், ஒரு வெள்ளி சிகரெட் பெட்டியுமிருந்தன. அச் சிகரெட் பெட்டியின்மேல் "பு" என்னும் எழுத்து செதுக்கப்பட்டிருந்தது. கைக் கெடிகாரத்தின் பின்பக்க மூடிக்குள் "பத்மநாபன்" என்று தெளிவாய்ச் செதுக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட பாலகிருஷ்ணன் "திருவேங்கடம்! இப்பொழுது எல்லாம் விளங்கிவிட்டன. இறந்தவன் பெயர் பத்மநாபன். இவன்தான் அரங்கநாதன் முதலியவர்களின் விரோதிபோல் காணப்படுகிறது. இன்னும் ஏதாவது கடிதங்கள் முதலியவைகள் இருக்கின்றனவா என்று பார்ப்போம்." என்றான்.



அவ்விதமே மறுபடியும் பரிசோதித்துப் பார்க்க ஒன்றும் காணப்படவில்லை. பத்மநாபன் என்னும் இவன் அரங்கநாதன்முதலியர்வர்களுடன் குடித்துக்கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவன் சாராயத்தில் விஷத்தைக் கலந்து இவனைக்கொன்றிருக்கவேண்டுமென்பது நன்றாய் விளங்கிற்று. ஆனால் யாரால் இப்படிச் செய்யப்பட்டதென்பதுமட்டும் தெரியவில்லை. கொலை நடந்து சுமார் இருபத்திநான்கு மணிகள் ஆகியிருக்கவேண்டுமென்றும் அவர்களுக்குத் தோன்றிற்று.

திருவே :—பாலு! நீ பத்மநாபனென்று பெயர்வைத்துக் கொண்டு சுந்தர விலாஸத்தில் வசிக்க ஆரம்பித்தவுடன், இவனை ஒழித்துவிடத் தீர்மானித்திருந்தார்கள் போல் காண்கிறது.

பாலகி :—எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. எனக்கு இந்தச் சூழ்ச்சிகள் ஒன்றுமே தெரியாதிருக்க இவன் மரணத்திற்கு நானும் உடந்தையாய் ஆய்விட்டேனே. (என்று வருத்தப்பட்டான்.)

திருவே :—இவர்கள் பெரிய மோசக்காரர்கள் என்பதில் சந்தேகமே கிடையாது. அப்படியில்லாவிட்டால் நீ சுந்தர விலாஸத்தில் ஒன்றுமே செய்யாமல் சும்மா இருக்கவா உனக்கு ரூபாய் ஆயிரம் மாதமொன்றுக்குக் கொடுப்பார்கள்?

பாலகி :—இனிமேல் ஒருநிமிஷம்கூட இம்மாதிரி மாறுவேஷத்துடன் என்னால் இருக்க முடியவே முடியாது. இதோ நான் போலீஸ் ஸ்டேஷன் சென்று சங்கதிகள் யாவற்றையும் சொல்லிவிடுகிறேன்.

திருவே:—அப்படி நீ சொல்வாயாகில்—

பாலகி:—அப்படிச் சொன்னால் என்ன ?

திருவே:—அவசரப்பட்டுக்கொண்டு இப்பொழுது நீ அங்கே சென்றால் உனக்கே கெடுதியாய் முடியும். மேலும் நீ செய்திருக்கும் தப்புத்தண்டாக்களைப் போலீஸ்காரர் மறந்தவர்களல்லர்.

பாலகி:—உண்மைதான். அவசரப்பட்டுக்கொண்டு சொல்லிவிட்டேன். என்னைக் காப்பாற்றிக்கொள்ள மௌனமாய் இருக்கவேண்டியதே.

திருவே:—ஆகையால் இனிமேலும் நீ பத்மநாபன் என்றே வசிக்கவேண்டும். நாம் விவகாரங்களைப் போகப்போக கவனித்துக்கொண்டுவருவோம்.

பாலகி:—நான் எத்தனைகாலம் அப்படி வசிக்கவேண்டுமோ?

திருவே:—என்? உன் ஆயுள்காலம் முழுவதும்தான். எனக்கும் அரங்கநாதன் வகையராக்களுக்கும் தவிர மற்றவர்களுக்கு நீ பாலகிருஷ்ணன் என்பது தெரியாது.

பாலகி:—ஒருக்கால் அவர்கள் போலீஸுக்குத் தெரிவித்துவிட்டால் ?

திருவே:—அது ஒருநாளுமில்லை. அவர்கள் வெளியேறிவிட்டாற்போல் காண்கிறது. அவர்கள் இங்கேயே இருந்தாலும் அவ்விதம் செய்யவேமாட்டார்கள். ஆனால் உனக்குச் சேரவேண்டிய பாக்கி இருபத்துமூவாயிர ரூபாயும் நாமம்தான்.

பாலகி:—அவர்கள் இங்கு செய்திருக்கும் இக் கோரமான கொலையைக் கண்டபிறகு அவர்களிடமிருந்து நான் இனி ஒருபைசாக்கூட வாங்கமாட்டேன். மேலும் இக் கொலையைப்பற்றி எப்படியாவது போலீஸுக்குத் தெரியப்படுத்தவேண்டியது நமது கடமை.

திருவே:—வாஸ்தவம். நீ பணம் பெற்றுக்கொள்ளாவிட்டால் உனது காலக்ஷேபம் எப்படி நடக்கும்? மேலும் நீ போலீஸுக்குத் தெரியப்படுத்தியதாய் அவர்களுக்குத் தெரிந்துவிட்டால், அரங்கநாதன் நீதான் பாலகிருஷ்ணன் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்தப் பின்வாங்கமாட்டான். அப்பொழுது உன் கதி அதோகதிதான்.



பாலகி:—ஒப்பந்தப் பத்திரத்தைப் போலீஸ்காரர்களுக்குக் காண்பிக்கிறேன்.

திருவே:—பிரயோஜனமென்ன? நீ அவர்கள் கையில் அகப்பட்டுவிட்டாலே போதுமானது. ஆகையால் மிகவும் ஜாக்கிரதையாய் இரு. இனி நாம் இங்கிருப்பதில் பிரயோஜனமில்லை. இதைப் போலீஸ்காரரே கண்டுபிடித்துக்கொள்ளட்டும்.(என்று சொல்லிப் பிணத்தின் சொக்காய் முதலியவற்றை ஒழுங்குபடுத்தினான்.)

பாலகி:—நாம் இவ் வீட்டைவிட்டுப் போகுமுன்னால் இவ் வீட்டை நன்றாய்ப் பரிசோதிப்போம். (என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே இவர்கள் திடுக்கிடும்படியாய் வாசற் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. அச் சத்தம் மூன்றுமுறை கேட்க) சரி; இது தபாற்காரன் தட்டும் சத்தம். இவர்களுக்கு ஏதாவது கடிதங்கள் வந்திருக்கலாம். அதை அவன் வாசலிலுள்ள தபாற்பெட்டியில் போட்டிருப்பான். அவைகளை நாம் கைக்கொள்ளவேண்டும். அவைகளிலிருந்து ஏதாவது உளவுதெரிந்துகொள்ளலாம்.

அவர்கள் புறப்படும் முன் அப் பிணத்தின் முகத்தை மறுமுறை பாலகிருஷ்ணன் உற்றுப்பார்க்க அது இயற்கையான முகமல்லாமல் தன் முகத்தைப்போல் அதிகப் பிரயாசைப்பட்டு வர்ணம் கொடுத்திருப்பதாய்க் கண்டு ஆச்சரியத்தோடு “ திருவேங்கடம்! சற்று இங்கு வந்து இதைப் பார். இது என் முகம் மாதிரியாய் இருக்கும்படி வர்ணம் தீட்டப்பட்டிருக்கிறது. இது என்ன விந்தையோ?” என்று சொன்னான்.

திருவே:—என்ன என்ன ?

பாலகி:—இதோ இதைத் தொட்டுப்பார். (என்று அப்பிணத்தின் முகத்திலிருந்த ஒரு கோட்டைக் காட்டினான்.)

திருவேங்கடம் அவ்விதமே பார்க்க வர்ணம் தன் விரலில் ஒட்டிக்கொள்ள "சரிதான்; இறந்தவன் பத்மநாபனாயிருக்க, நீதான் கடன்காரர்களுக்கும் போலீஸுக்கும் பயந்து தற்கொலை செய்துகொண்டதாய்ப் பிறர் எண்ணிக்கொள்ளும்பொருட்டு இப்படிச் செய்திருக்கிறார்கள். அவர்கள் மிகவும் சாமர்த்தியமுடையவர்களாய்க் காணப்படுகிறார்கள். இனி இங்கு வேலையில்லை. போகலாம் வா." என்று சொல்லித் தன்னிடமிருந்த இருட்டு லாந்தரைக் கொளுத்திக்கொண்டு மின்சாரவிளக்கை அணைத்துவிட்டுக் கதவை முன்போல் பூட்டிவிட்டான். உடனே அவ்விருவரும் லாந்தர் வெளிச்சத்தால் அவ் வீடு முழுமையும் தேடிப் பார்த்தும், உளவு அகப்படக்கூடியவைகள் ஒன்றுமே காணப்படவில்லை. உடனே பிறருக்குச் சந்தேகமேற்படாவண்ணம் கதவுகளை முன்போலவே சாத்திப் பூட்டிக்கொண்டு, வாசற் பக்கத்தில் கதவின் உட்புறமுள்ள தபாற் பெட்டியைத் திறந்துபார்க்க, இரண்டு கடிதங்கள் அதில் இருக்க, அவைகளைத் தங்கள் ஜேபில் வைத்துக்கொண்டு, முன் உள்ளே சென்ற ஜன்னல் வழியாகவே வெளியே வந்து ஜன்னலை மூடிவிட்டு, நேராக சுந்தர விலாசமடைந்தார்கள்.

அப்பொழுது மணி சுமார் ஒன்று இருக்கலாம். இவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்த சீனுவைப் படுக்கைக்கு அனுப்பிவிட்டுத் தங்கள் அறைக்குச் சென்று கதவை நன்றாய்த் தாளிட்டுக்கொண்டு மேஜையண்டையில் நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டார்கள். உடனே பாலகிருஷ்ணன் தன் ஜேபிலிருந்த இரண்டு கடிதங்களையும் எடுத்து ஒன்றை மேஜையின்மேல் வைத்துவிட்டு மற்றொன்றைப்பிரித்துப்பார்க்க அது ஒரு கம்பெனியிலிருந்து அரங்கநாதன் வாங்கிய உடுப்புகளுக்குப் பில்லாய் இருந்தது. அதை வைத்துவிட்டு மற்றொன்றைப் பார்க்க அதன்மேல் "மகா-ா-ா-ஸ்ரீ அரங்கநாதர் மேல்விலாசம் பார்த்து மாதுஸ்ரீ குமுதவல்லியம்மாளுக்குக் கொடுப்பது." என்று ஒரு புருஷனால் எழுதப்பட்டிருந்தது.



இதை வாசிக்கக் கேட்ட திருவேங்கடம் "ஆ! எந்தக் குமுதவல்லி? உனக்கு எச்சரிக்கை செய்த குமுதவல்லியா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

பாலகி:—ஆம். அக் குமுதவல்லிக்கேதான்.

திருவே:—இதிலிருந்து ஏதாவது உளவு அகப்படலாம். வாசி பார்ப்போம்.

உடனே பாலகிருஷ்ணன் பின்வருமாறு வாசிக்கலானான்.—

"எனது அன்பார்ந்த குமுதம்! நான் உனக்கு மறுமுறை கடிதம் எழுதியதை மன்னிக்கவும். என்னால் எழுதாமலிருக்கவும் முடியவில்லை. நீ இப்பொழுது என்னைக் காதலிக்கவில்லை என்பதை நான் நன்றாய் அறிவேன். எனது பகைவன் எவனோ உன் மனதைத் திருப்பியிருக்கவேண்டும். என்னைப்பற்றி ஏதாகிலும் தவறுதலான சமாசாரங்களைச் சொல்லியிருக்கவேண்டுமென்றே நினைக்கிறேன். அவ் விஷயத்தை ஒருநாள் உன்னிடம் நேரில் சொல்லி அது பொய் என்பதை நிரூபிக்கிறேன். நீ என்னைக் காதலிக்கவில்லையென்றும், உன் காதலைப் பெற்றவன் வேறொருவன் இருக்கிறான் என்றும், நீயே என்னிடம் கூறியிருக்கிறாய். இப்பொழுது நீ நான் ஆபத்தில் சிக்கிக்கொண்டிருப்பதாய் எச்சரித்தாய். அவ்வாபத்து எவ்விதமானதென்று உனக்கு நன்றாய்த் தெரிந்திருப்பதினால், அதை என்னிடம் நீ சொல்லவேண்டியவளல்லவா? ஆகையால் நான் நாளைப் தினம் சாயங்காலம் ஐந்தரைமணிக்கு பீப்பிள்ஸ் பார்க்கிலுள்ள பிள்ளையார் கோவிலில் உனக்காகக் காத்துக்கொண்டிருப்பேன். என்னை மாறு வேஷத்தில் நீ முன் கண்டிருப்பதால், என்னைச் சுலபமாய்க் கண்டுபிடித்துவிடுவாய். ஆகையால் நீ அவசியம் வரவேண்டும். இப்பொழுது என் பெயரை வைத்துக்கொண்டு சுந்தர விலாஸத்தில் வசிக்கும் மனிதன் யார்? இவ் விஷயங்களை என்னிடம் அவசியம் கூறவேண்டும். வரத் தவறவேண்டாம். இப்படிக்கு,

உன் அன்பார்ந்த நண்பன்,

பத்மநாபன்."

இதை வாசித்தவுடன் பாலகிருஷ்ணன் திருவேங்கடத்தைப் பார்த்து "இதை எழுதியவன் பவழக்காரத்தெருவில் இறந்துகிடக்கும் பத்மநாபனென்று தெளிவாய் விளங்குகிறது." என்றான்.

கடிதத்தின் உள் உள்ள தேதியையும், கவரின் மேலுள்ள தாபாலாபீஸின் தேதியையும் பார்த்த திருவேங்கடம் "இக் கடிதம் நேற்றைய சனிக்கிழமையன்று எழுதப்பட்டு, இன்றைய தினம் திங்கட்கிழமை சாயங்காலம்தான் தபாலில் போடப்பட்டிருக்கிறது. ஆனால் எழுதியவனின் மேல்விலாசம் காணப்படவில்லை. அது இருந்தால் மிகவும் சௌகரியமாயிருக்கும். இக் கடிதத்தை சனிக்கிழமை எழுதி மறதியால் தபாலில் போடாமல் மேஜையின்மேலேயே வைத்திருக்கலாம். இன்றைய தினம் பார்க்கப்பட்டுத் தபாலில் வேலைக்காரனால் போடப்பட்டிருக்கவேண்டும். இக் குமுதம் யாராகவிருக்கலாம்? ஒருக்கால் அரங்கநாதனின் கூட்டாளியாக இருக்கலாமோ? அப்படியாயிருந்தால் உனக்கு எச்சரிக்கை செய்திருக்கமாட்டாளே. இன்னும் இவள் பத்மநாபனுக்கு அவனைப்போல் சுந்தரவிலாஸத்தில் ஒருவன் வசிக்கிறான் என்றும் சொல்லியிருக்கிறாள். ஆனால் அப்படி வசிப்பவன் நீ என்று மட்டும் சொல்லவில்லை என்பதுமட்டும் நன்றாய்த் தெரிகிறது." என்றான்.

பாலகி:—அவன், குமுதத்தைப் பார்க்க, குறித்தவிடத்திற்குப் போய் கார்த்துக்கொண்டிருந்துவிட்டுத் திரும்பிப் போயிருப்பான். இது குமுதத்திற்கு எப்படித் தெரியும்?

திருவே:—அப்படித்தானிருக்கவேண்டும். நீ குமுதத்தைப் பார்த்திருப்பதால், அவள் எவ்விதமாயிருந்தாளென்பதைச் சொல்.

பாலகி:—அவள் தனது முகத்தை முகமூடியால் மறைத்துக்கொண்டிருந்தாள், ஆகையால் அவளது முகத்தைப் பார்க்கமுடியவில்லை. ஆனால் அவளது பேச்சினால்



அவள் ஒரு சீமாட்டியாகவே இருக்கவேண்டுமென்பது நிச்சயம்.

திருவே:—பத்மநாபனையாவது அல்லது அவன் வசிக்கும் இடமாவது தெரிந்துவிட்டால் நீ இப்படி வசிக்கவேண்டிய காரணத்தைத் தெரிந்துகொண்டுவிடலாம்.

பாலகி:—அதற்கு நாம் இப்போது என்ன செய்யலாம்?

திருவே:—போலீசுக்குச் சென்றால் ஆபத்து. அது கூடாத காரியம். ஆகையால் நாம் பொறுத்திருந்து, விஷயங்களை நாமே கண்டறியவேண்டும். பொழுது விடிந்ததும் அவ் வீட்டின் வாசற்கதவு பூட்டியிருக்க, ஜன்னல் கண்ணாடி எடுபட்டிருப்பதை யாராகிலும் பார்ப்பார்கள். அவர்கள் போலீசுக்குத் தகவல் தெரியப்படுத்திவிடுவார்கள். போலீஸ்காரர்கள் அவ் வீட்டில் திருட்டு முதலானது நடந்திருக்குமோவென்று பார்ப்பார்கள். அப்பொழுது இப் பிணம் கண்டுபிடிக்கப்படலாம். எல்லாம் நாளைக்குத் தெரியும்.

பாலு:—அப் பிணத்தைக் கண்டுபிடிப்பார்கள் என்பது நிச்சயமல்ல. சாமான்கள் வைத்தது வைத்தபடியேயிருக்கத் திருட்டு நடந்திராதென்றே நினைப்பார்கள். மேலும் பிணமிருக்கும் அறையைத் திறந்துபார்த்தாலும் மேஜைக்கும் சுவருக்கும் நடுவிலுள்ள பிணம் அவர்கள் கண்ணிற் படாது. இவ்விதமான கொலைகள் இப் பட்டணத்தில் ரகஸியமாய் நடப்பது சகஜம்தானே.

இவர்கள் இவ்விதமாய் பேசிக்கொண்டிருக்க மணியும் மூன்றடித்தது. உடனே திருவேங்கடம் நாழிகையாகிவிட்டதென்றும், மறுநாள் ஆபீஸ் போகவேண்டியிருப்பதால் சற்று இளைப்பாரவேண்டுமென்றும், மறுநாள் மாலை ஆறு மணிக்கு தான் அவசியம் வருவதாகவும், அதற்குள் அவசரப்பட்டு ஒரு காரியமும் செய்யவேண்டாமென்றும், வெளியே எங்கும் போகாமல் ஜாக்கிரதையாய் இருக்கும்படிக்

கும் பாலகிருஷ்ணனிடம் சொல்லிவிட்டு, அவனிடம் விடைபெற்றுக்கொண்டு தன் இருப்பிடம் சென்றான்.

மறுநாள் மாலை ஆறுமணிக்குத் திருவேங்கடம் பாலகிருஷ்ணனிடம் வந்து "நண்பா! நான் ஒருமணிக்கு முன்புதான் பவழக்காரத்தெருவிற்குச் சென்றிருந்தேன். நான் அவ் வீட்டில் என்ன கண்டிருப்பேன் என்பதைச் சொல்லு பார்ப்போம்." என்றான்.

பாலகி:—என்ன கண்டாய்?

திருவே:—நாம் எடுத்துவிட்ட அவ் வீட்டின் ஜன்னலின் கண்ணாடி மறுபடியும் புதிதாகப் போடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து அவ் வீட்டை அவர்கள் கவனித்துக்கொண்டிருப்பதாய்த் தோன்றவில்லையா?

பாலகி:—ஆம். போலீஸ்காரர்கள் சந்தேகம் கொள்ளா வண்ணம் செய்திருக்கலாம். யார் அவ் வீட்டைக் கவனித்தால் என்ன? நாமும் கவனித்துவருவோமே. மேலும் அவர்கள் எனக்குச் சேரவேண்டிய தொகையை பாங்கியில் கட்டிவிட்டதாக அரங்கநாதன் எழுதியது வாஸ்தவந்தானாவென்று பார்த்துவரும்பொருட்டு சீனுவை இன்று காலை பதினொருமணிக்கு எனது கையெழுத்து மாதிரியைக் கொடுத்து பாங்குக்கு அனுப்பினேன். அவர்கள் பாங்கியில் தொகையைக் கட்டியது வாஸ்தவமென்று சீனு வந்து சொன்னான். இதுதான் இன்றையதினம் நான் செய்த வேலை.

---

## அத்தியாயம் 6.

இவ்விதம் அவ்விருவரும் அவ் வீட்டைக் கவனித்துக்கொண்டிருப்பவர் யாராக இருக்கலாமென்றும், அப்படிக் கவனிப்பதும் இரவு காலத்தில்தான் என்றும், அவ் வீட்டின் சமீபத்தில் இராக்காலத்தில் போவது ஆபத்திற்கிடமாகுமோவென்றும், ஏன் அவர்கள் அவ்வீட்டைப் பூட்டிவிட்டுக் கவனிக்கவேண்டுமென்றும் பேசிக்கொண்டிருக்க, சீனு அவ்விருவருக்கும் ஆகாரம் கொண்டுவந்தான். அவர்கள் அவ்வாகாரத்தை உட்கொண்டு, பத்து மணிக்கு ஹோட்டலைவிட்டுப் புறப்பட்டு பவழக்காரத்தெரு கிருஷ்ணன் கோவிலை அடைந்தார்கள். தெருவும் சந்தடியடங்கி ஜன நடமாட்டமில்லாமலிருந்தது. அன்னியர்கள் போல் நடித்து அவ் வீதியில் புகுந்து அவ் வீட்டைக் கவனிக்க ஆரம்பித்தார்கள். இவ்விதம் அரை மணி செல்லத் தெருக்கோடியில் தபாற்காரன் கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. உடனே அவர்கள் அவன் வரவை எதிர்பார்த்துக்கொண்டு மறைவாய் இருந்தார்கள். தபாற்காரன் இவர்கள் கவனித்துவரும் வீட்டின் வாசற்படி ஏறி ஒரு கடிதத்தை தபாற்பெட்டியில் போட்டுவிட்டு, எச்சரிக்கைக்காகக் கதவை மூன்று முறை தட்டிவிட்டுச் சென்றான். சற்று நேரத்திற்கெல்லாம் அநேக வண்டிகள் அத் தெருவிலுள்ளவர்களில் சிலரை அவரவர்கள் வீட்டில் கொண்டுவிட்டுச் சென்றன. ஆனால் 31 நெ. வீட்டிற்கு ஒருவரும் வரவில்லை. மணியும் பன்னிரண்டு ஆயிற்று. அப் பெட்டிக்குள்ளிருக்கும் கடிதத்தை எவ்விதம் கைப்பற்றலாமென்று யோஜனை செய்துகொண்டும், அவ் வீட்டின்மேலேயே கண்ணோட்டமாயுமிருந்த பாலகிருஷ்ணன் தன் பக்கத்திலிருந்த திருவேங்கடத்தினிடம் ஏதோ சொல்லத் திரும்பிப்பார்த்தான். திருவேங்கடம் காணப்படவில்லை. ஆச்சரியத்துடன் தெருவின் இருபக்கமும் கவனித்தான். மண்ணடிக் கடைத்தெருவுவரையிலும் இப்பக்கம் கிருஷ்ணன்கோவில் வரையிலும் சென்று பார்த்தான். திருவேங்கடம் காணப்படவில்லை, அவன் எப்படியோ திடீரென்று மாயமாய் மறைந்துவிட்டான். இதைக் கண்ட பாலகிருஷ்ணன் ஆச்சரியமும் திகிலும் அடைந்து யோஜித்துக்கொண்டிருக்கும் பொழுது, அவ் வீட்டின் வாசலில் திடீரென்று ஒரு வண்டி வந்து நின்றதும், ஓர் ம[illegible] வண்டியிலிருந்து கீழிறங்கி அவ் வீட்டின் கதவைத் திறந்து உட்சென்று [illegible]நேரத்தில் வெளியே வந்[illegible]ன்போல் கதவைப் பூ[illegible]காண்டு,

மிகுந்த பரபரப்புடன் வண்டியேறித் தன்னை ஏற்றிவந்த விடத்தில் வேகமாய்க் கொண்டுவிடும்படி வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டான். வண்டி மிகவும் வேகமாய்ச் சென்றது. லாந்தல் வெளிச்சத்தால் வந்து சென்றவன் தியாகராஜன் என்பதைக் கண்டுகொண்ட பாலகிருஷ்ணன், அவ்வண்டியைத் தொடர்ந்துசென்றால் அவனிருப்பிடத்தைக் கண்டறியலாமென்று நினைத்து, அதைப் பின்தொடர்ந்து மிகவும் வேகமாய் ஓடினான். அவ் வண்டி ஹைக் கோர்ட்டை நோக்கித் தம்புசெட்டித்தெரு வழியாக மிகவும் வேகமாய் ஓடிக்கொண்டிருக்கக் கண்டு, ஓடி அவ் வண்டியைத் தன்னால் பிடிக்கமுடியாதென்று கண்டுகொண்டு, சற்று தூரத்தில் நின்ற ஓர் ஜட்காவண்டியை அமர்த்திக்கொண்டு, முன் செல்லும் வண்டியைப் பின்தொடரும்படியாய் உத்தரவு செய்தான். முன் சென்ற வண்டி ஹைக் கோர்ட்டை அடைந்ததும், தியாகராஜன் கீழிறங்கி வண்டிக்காரனுக்குச் சத்தம் கொடுத்துவிட்டுக் கால்நடையாகவே அரண்மனைக்காரத்தெருவிற்குச் சென்று அங்கொரு வீட்டைத் திறந்துகொண்டு உள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டான். பாலகிருஷ்ணன் அவனை நிழல்போல் பின்தொடர்ந்து அவ் வீட்டின் அடையாளத்தை நன்றாய்க் கவனித்துக்கொண்டு தன் ஹோட்டல் வந்துசேர்ந்தான்.

மறுநாள் காலையில் பாலகிருஷ்ணன் தன்னை வந்து பார்க்கும்படித் திருவேங்கடத்திற்கு ஓர் கடிதம் எழுதி அதைச் சீனுவிடம் கொடுத்தனுப்பினான். சீனு அவ்வாறே சென்று சுமார் ஒருமணிக்குத் திரும்பிவந்து "ஐயா நான் உமது நண்பர் வீட்டிலும் ஆபீஸிலும் போய்த் தேடிப்பார்த்தேன். அவரை அவ்விடங்களில் காணோம். வீட்டில் விசாரிக்க நேற்றைய மாலை வெளிச்சென்றவர் இன்னும் திரும்பி வரவில்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆபீஸில் விசாரித்ததில் அவர் லீவு[illegible] கடிதம் [illegible]வில்லையென்றும், கண்டிப்பாய் [illegible]ர்கள். பன்னிரண்டுமணி[illegible]ம் காத்துக்கொண்டிரு[illegible]ன். வரவில்லை.

188790
சென்னை-! 00 008

188790



நான் திரும்பி வந்துவிட்டேன்." என்று சொல்லி கடிதத்தையும் திருப்பிக்கொடுத்துவிட்டான்.

இதைக் கேட்ட பாலகிருஷ்ணன் தன் நண்பனுக்கு என்ன சம்பவித்ததோவென்று எண்ணாததெல்லாம் எண்ணி வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது மணியும் நான்கு அடித்தது. அதே ஸமயத்தில், சீனு உள்ளே வந்து, "ஐயா? முன்பு தங்களிடம் பேசிச் சென்ற பெண்மணி இப்பொழுது உங்களைக் காணக்காத்துக்கொண்டிருக்கிறாள். உத்தரவானால் அழைத்துவருகிறேன்." என்றான்.

பாலகி:—அவளை உடனே இங்குஅழைத்துவா. ஆனால் அவள் இங்கு இருக்கும்போது திருவேங்கடம் வந்தால், நான் வெளியே போயிருப்பதாய்ச் சொல். என்னைக் காண வேண்டுமானால் ஆறரை மணிக்கு வரச்சொல். நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்.

சில நிமிஷங்களில் குமுதவல்லியும் அவ்வறையின் கதவண்டையில் சற்றுத் தயங்கி நின்றுகொண்டிருந்தாள்.

பாலகி :—அம்மா! நீங்கள் வந்ததைப்பற்றி
ஷம். ஏன் உள்ளே வருகிறதுதானே.
இந்த நாற்காலியில் உட்காருங்கள்.

அப்படியே குமுதவல்லி உள்ளே வந்து, நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, பாலகிருஷ்ணனைப் புன்சிரிப்புடன் பார்த்தாள்.

பாலகி :—ஏது இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்டது? விசேஷம் ஏதாகிலும் உண்டோ?

குமுதம் :—உம்மைப் பத்மநாபரென்றே அழைக்கிறேன். ஏன் நீங்கள் தினம் ஆபத்துக்குள்ளாகும்படி நடக்கிறீர்கள்? உங்களை ஜாக்கிரதையாய் இருக்கும்படி நான் எச்சரிக்கவில்லையா?

பாலகி :—நீங்கள் சொல்லுவது விளங்கவில்லையே.

குமுதம் :—நீங்கள் ஏன் பவழக்காரத்தெருவிற்குச் சென்றீர்கள்? அது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

அரங்கநாதன்.

பாலகி :—என [illegible] அவர்களுக்குத் தெரியுமா?

குமுதம் :—ஆம். நன்றாய்த் தெரியும்.

பாலகி :—நான் செய்தது தவறுதல்தான். ஆனால் நான் அப்படிச் செய்யாவிடில் நான் என் மனோவேதனை யால் இறந்தேயிருப்பேன்.

குமுதம் :—நீங்கள் இப்பொழுதிருக்கும் ஸ்திதியில் நான் இருந்தால், நான் தற்கொலையே செய்துகொண்டிருப் பேன். அப்படிச் செய்துகொள்வதும் கௌரவமே.

பாலகி :—ஆம், நான் பத்மநாபனென்று இங்கு வசிப்பதே கௌரவக் குறைவானதும் ஈனமான தொழிலென்றும் எனக்குத்தெரியும். அம்மா குமுதம்! உனக்கு உண்மை நிச்சயமாய்த்தெரியும். எதற்காக பத்மநாபர் இங்கே வசிக்கவேண்டும்.

குமுதம் :—உம்மை அடிமையாக்கிக்கொண்ட நால்வரின் நன் மைக்காகவும் எனக்காகவும்தான்.

[illegible] ர்கவா? விஷயத்தை விபரமாய்ச் சொல்ல

[illegible] :—உயிர்களின் கெட்ட நடத்தைகளும் எண்ண உமக்குத் தெரியவே தெரியா.

பாலகி :—ஆனால் நீங்களும் என்னைப்போல் அகப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா?

குமுதம் :—நான் என் சரீரத்தை அவர்களிடம் விற்றுவிட வில்லை.

பாலகி :—உமக்குப் பத்மநாபனை நன்றாய்த் தெரியும்போல் இருக்கிறதே.

இதைக் கேட்டதும் குமுதத்தின் முகம் வெளுத்து விட்டது. மருளமருள விழித்துக்கொண்டு "அப் பெய ருள்ளவரை எப்பவோ ஒருசமயம் பார்த்திருக்கிறேன். கொஞ்சம் தெரியும்." என்று தாழ்ந்த குரலில் சொன்னாள்.

பாலகி :—அவர் என்னைப்போலவே இருப்பாரோ?

**வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!**

பாலவித்யா ஜர்னலில் 1, 2 வருஷங்களில் முடிவடைந்த, அதி ஆச்சர்யமான திடுக்கிடும் சூழ்ச்சிகளும், காதல் மாட்சிகளும், கற்பின் விசேஷமும், துப்பறியும் தீரமும் நிறைந்து, நவரஸங்களும் அமைந்த இனிய தமிழ் நாவல்கள்

(P. கும்பேசுவான் இயற்றியது)

| | | | | |
|---|---|---|---|---|
| சபேசன் ... ... ... | ரூ. 1 | 8 | 0 |
| நாகலிங்க நாடான் அல்லது ஏழைகளின் ஊழியன் ... | ,, 1 | 4 | 0 |
| தியாகராஜன் ... ... | ,, 1 | 0 | 0 |
| கங்காதரன் ... ... | ,, 0 | 12 | 0 |

(K. குப்புஸ்வாமி இயற்றியது)

| | | | |
|---|---|---|---|
| கற்புள்ள இந்திரா ... ... | ரூ 0 | 8 | 0 |

பாலவித்யா ஜர்னலில் 3வது ஆண்டு ... புதிய தாரர்கள் ஷை நாவல்களுக்கு ஆர்டர் செய்தால் தபால் ... இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.

**பாலவித்யா ஆபீஸ்,**
**கும்பகோ...**

---


# "மாஸ்டர் டோபி"

இந்த "மாஸ்டர் டோபி ஸோப்" எல்லாவித உடைகளையும் சிரமமின்றி வெளுக்கும் திறமையுள்ளது. மற்ற எல்லா சோப்புகளைவிட குணத்தில் மேன்மையானது. ஒருமுறை உபயோகித்தால் நன்கு விளங்கும்.

எல்லாவிடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

விலை விபரத்திற்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

**மோஹினி ஸோப் ஒர்க்ஸ்,**
...ண் தெரு, கும்பகோ...